# சேர். அருணசலம் மறைவுக்கு பல கல்லூரிகள் அஞ்சலி

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்:119
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 28 ரபி;அவ் 24 செவ்வாய்க்கிழமை [10-6-69]

மோட்டார்-வாகன-யந்திரங்கட்கு
கெட்-புளொக்
மலிபோல்ட்,
பேசிங்!
HEADFACING
செய்து கொடுக்கப்படும்.
ராமகிருஸ்ணஸ்
ஸ்ரான்லி வீதி, :: :: யாழ்ப்பாணம்.
போன்: 7179.

யாழ்ப்பாணம், செவ்.

முன்னாள் உள்நாட்டமைச்சர் சேர் அருணசலம் மகாதேவா கே. சி. எம். ஜி. நேற்று முன்தினம் மாலை கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் காலமானார்.

இவரது மறைவையொட்டி நேற்று யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இவர் காலஞ்சென்ற முன்னாள் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் செனட்டர் சு. நடேசபிள்ளையின் நெருங்கிய உறவினர் என்பதும் பரமேஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சேர் மகாதேவா தமது ஆரம்பக்கல்வியை றோயல் கல்லூரியில் பெற்றார். அங்கு மிகவும் சிறந்த மாணவனுக்குரிய பரிசை அவர் பெற்றார். பின்னர் கேம்றிஜ் சர்வ கலாசாலையில் பயின்றபோது அங்கு கணிதத்தில் சிறந்து விளங்கினார்.

லண்டனில் பாரிஸ்டர் பட்டம்பெற்றுத் திரும்பிய சேர் மகாதேவா இங்கு கல்வித்துறைக்குப் பெரும் பணி புரிந்துவந்தார். பொதுப்பணியிலும் ஈடுபட்டு மக்கள் நலனில்குறிப்பாக தமிழ் மக்கள் நலன்களில் அக்கறை கொண்டு உழைத்துவந்தார்.

1919-ம் வருடத்திலிருந்து 1924-ம் வருடம்வரை இலங்கைத் தேசிய காங்கிரசின் காரியதரிசியாகப் பதவி வகித்துவந்த இவர் சட்டசபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவராகக்கடமையாற்றினார்.

1932-ம் வருடத்திலிருந்து 1934-ம் வருடம்வரை தேசிய அடைமான வங்கியின் மனேஜராக சேவையாற்றினார். இதன்பின் ஆட்சிமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவிவகித்தார்.

சேர் மகாதேவா 1949 ம் வருடத்தில் இலங்கையின் இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டார்.

இவர் சில காலம் அரசாங்க சேவைக் கமிஷனின் அங்கத்தவராகவுமிருந்தார்.

தமது 84 வயதில் காலமான சேர் மகாதேவா, லேடி மகாதேவா, உணவு விவசாய அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியான புதல்வர் திரு. பி. மகாதேவா, புதல்வியான பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியர் திரு. ரி. நடராஜாவின் மனைவி திருமதி ரி. நடராஜா ஆகியோரை விட்டுச்சென்றுள்ளார்.

இவரது மறைவுக்கு யாழ்ப்பாணத்தில் பல ஸ்தாபனங்கள் தமது அஞ்சலியை செலுத்தியுள்ளன.

## கள்ளக்கடத்தல்; சட்டவிரோத குடியேற்ற பற்றி பொலிஸ் அதிபர்

கொழும்பு, திங்கள்

சட்டவிரோதக் குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கிறதென்றும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிறார்களென்றும் பொலிஸ் அதிபர் திரு. அலரிக் அபயகுணவர்த்தன இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

கள்ளக்கடத்தல் பற்றி அவர் குறிப்பிடுகையில், இதைத் தடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் போதாதென்றும் அவர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார்.

# சகலரையும் வெளியே நிறுத்தும் ஆலயம்மீது நடவடிக்கை இல்லை?

7683 ரூபா 69 சதம்

## கூட்டுறவுச்சங்க மோசடி: பணம் கட்டுமாறு தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

கமத்தொழில் ஆணையாளரிடம் செலுத்தவேண்டிய அங்கத்தவர்களின்பணத்தை மோசடி செய்ததென்று குற்றம்சாட்டி பழைய நிர்வாகிகள் மீது புதிய நிர்வாகிகளால் தாக்கல்செய்யப்பட்ட மனுவொன்றின் விசாரணை முடிவில் பழைய நிர்வாகிகள் 7683 ரூபா 69 சதம் செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இம்மனுவை அன்னுங்கை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகிகள், பழைய நிர்வாக சபைத் தலைவரான த. சிவரத்தினம் உட்பட ஒன்பதுபேர் மீது குற்றம்சாட்டித்தாக்கல்செய்திருந்தனர்.

இளைப்பாறிய சுகாதாரப் பகுதி கணக்காளரான திரு. எஸ். இளையதம்பி இதனை விநியோகிப்பதற்கு கடனாகப்பெற்ற பணத்தை அங்கத்தவர்கள் சங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்தும், பழைய நிர்வாகிகள் கமத்தொழில் ஆணையாளரிடம் பணத்தைச் செலுத்தவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

மனுதார் தரப்பில் சங்கத்துக்காக திரு. க. சின்னராஜாவும், எதிரிகள்சார்பில் இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எம். சின்னத்தம்பியும் ஆஜராகியிருந்தனர்.

(கா. நி.)

## திருநாள்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நற்கருணைத்திருநாள் கொண்டாடப்பட்டது. பிரதான வீதி

## ஸ்ரீலஸ்ரீ வேண்டாமாம்

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர் உருவச் சிலையில் ஸ்ரீலஸ்ரீ என்று பொறிக்கப்பட விருப்பதைக் கண்டித்து இலங்கை மத்திய தமிழ் இலக்கிய மன்றம் ஆறுமுக நாவலர் சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு முதலில் ஸ்ரீலங்கா மகா வங்கி என்று பெயரிட முனைந்தபோது அதன் பெயரைத் தாம் ஆட்சேபித்ததாலேயே அதற்கு இலங்கை மத்திய வங்கி என்று பெயர் மாற்றப்பட்டதாகவும், இந்த நிலையில் ஒரு 'ஸ்ரீ' யை எதிர்த்த தங்களால் எப்படி இரண்டு 'ஸ்ரீ' யை ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் இக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ என்பது ஒரு வடமொழிச் சொல் என்றும், இதற்குப் பதிலாக திருப்

## அட்டர்ணிஜெனரல் சந்திப்பைத்தொடர்ந்து தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"உயர்சாதியினர், தாழ்ந்த சாதியினர் என்று பாகுபாடு காட்டாது, சகலரையும் வெளியேநின்று வணங்கவிட்டால், அங்கு சமூக ஏற்றத்தாழ்வு சட்டத்தையோ, சட்டப்பிரச்னையையோ எழுப்புவது சாத்தியமாக இருக்காது."

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையொன்றில் அட்டர்ணி ஜெனரல் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில்வட பகுதி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கமும் சமுகம் கொடுத்திருந்தார். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் உற்சவம் பற்றியும், ஆலயப் பிரவேசப் பிரச்னை பற்றியும் இங்கு நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

பிரதம அர்ச்சகரையும், குறிப்பிட்ட தொண்டர்களையும் மட்டும் உள்ளேவிட்டு, மிகுதிப் பேர் அனைவரையும் வெளியே நின்று வணங்க விடுவது இப்போதுசகல ஆலயங்களிலும் கடைப்பிடிப்பது வழக்கமாகிவிட்டதாக அட்டர்ணி ஜெனரலின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சமயத்தில் சட்டப்பிரச்னை சாதகபதிலைக் கொடுக்காது என்றும் இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி கந்தசாமி கோவில், நாச்சிமார்கோவில் சித்தங்கேணி கோவில் ஆலயப் பிரவேச சம்பவங்கள் பற்றியும் இங்கு ஆலோசனை செய்யப்பட்டது.

ஒரு தொண்டர் படை மூலம் குறிப்பிட்ட ஒரு சாதியினரை உள்ளேவிட்டு மற்றொருசாதியினரை வெளியே விடுவதைத் தடுக்கச் சட்டமூலமான விதிகளும் இங்கு ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

## அரசாங்கஉத்தியோகங்களில் விசேஷசலுகை வேண்டும்

### சிறுபான்மைத்தமிழர்கோருவர்

உடுப்பிட்டி, திங்கள்

அரசாங்க உத்தியோகங்களில் சிறுபான்மைச் சமூகப் படித்தவாலிபர்களுக்கு விஷேட சலுகை வழங்குமாறு கோரி வடமராட்சிச் சமூகசேவா சங்கம் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் சிறுபான்மைத் தமிழரில் வேலையற்ற பட்டதாரிகளும், சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் அநேகர் உள்ளனர். காலியாக விருக்கும் அரசாங்கப் பதவிகளுக்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கும் இடமளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

கல்வி மந்திரிக்கு இம் மகஜர் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சரைப் பற்றிய ஆலோசனைக்கூட்டமொன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இம்மாத நடுப்பகுதியில் சிறுபான்மைத் தமிழரின் இன்னல்களைக் கல்வி மந்திரிக்கு எடுத்துக் கூறுவதற்குச் செல்வதற்கெனத் தூதுகோஷ்டியொன்று தெரிவு செய்யப்பட்டது. திருவாளர்கள் எம். எஸ். சீனித்தம்பி, த, இராசலிங்கம், சீனித்தம்பி, ஆ. தம்பையா ஆகியோரைக் கொண்ட இத்தூதுக்குழு ஆசிரியர் திரு. ஆ. ம. செல்வத்துரை தலைமையில் செல்லும்.

இக் கூட்டத்தில் திருவாளர்கள் ஆர். விஜயரத்தினம் சீனித்தம்பி, சி. திரவியம், எஸ். சதானந்தன், வே. த. தணிகாசலம் ஆகியோரும் பேசினர்.

## எம்.பி. யிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் தற்போதைய நிர்வாகிகள், பழைய நிர்வாகசபைத் தலைவரான த. சிவரத்தினம் உட்பட ஒன்பது பேர் மீது குற்றம்சாட்டித்தாக்கல்செய்திருந்தனர்.

இளைப்பாறிய சுகாதாரப் பகுதி கணக்காளரான திரு. எஸ். இளையதம்பி இதனை விசாரணைசெய்தார். கமத்தொழில் ஆணையாளரிடம் நீர்இறைக்கும் இயந்திரம் வாங்கி, அங்கத்தவர்களுக்கு, ராகியிருந்தனர்.

(கா. நி.)

## திருநாள்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நற்கருணைத்திருநாள் கொண்டாடப்பட்டது. பிரதான வீதியிலும் என்றியரசர் கல்லூரி மைதானத்திலும் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது.

ஒரு 'ஸ்ரீ' யை எதிர்த்த தங்களால் எப்படி இரண்டு 'ஸ்ரீ' யை ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் இக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ என்பது ஒரு வடமொழிச் சொல் என்றும், இதற்குப் பதிலாக திருப்பெருந் திரு, மறைத் திரு, தவத்திரு, என்ற தமிழ்ச் சொற்களில் ஒன்றை ஆறுமுக நாவலர் பெயருக்கு வைக்குமாறு இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றத்தின் செயளாளரான திரு. க. சின்னராஜாவால் எழுதப்பட்ட இக் கடிதம் நாவலர் சபைத் தலைவரான நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(கா. நி)

பகுதி பொலிஸ் சுப்பிரின்டென்ட் திரு. ஆர். சுந்தரலிங்கமும் சமூகம் கொடுத்திருந்தார். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் உற்சவம் பற்றியும், ஆலயப் பிரவேசப் பிரச்னை பற்றியும் இங்கு

யங்களிலும் கடைப்பிடிப்பது வழக்கமாகிவிட்டதாக அட்டர்ணி ஜெனரலின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சமயத்தில் சட்டப்பிரச்னை சாதகபதிலைக்

செய்யப்பட்டது.

ஒரு தொண்டர் படை மூலம் குறிப்பிட்ட ஒரு சாதியினரை உள்ளேவிட்டு மற்றொருசாதியினரை வெளியே விடுவதைத் தடுக்கச் சட்டமூலமான விதிகளும் இங்கு ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

ஆகம வேதாகமங்களைச் சுட்டிக் காட்டி ஆலயங்களுக்கு வெளியே சகலரையும் நிறுத்துவதற்கு எதிராக நடப்பது பற்றி அட்டர்ணி ஜெனரல் இன்னும் தெளிவான பதில் கொடுக்கவில்லையென்று பொலிஸ் அதிபர் திரு. அலரிக் அபயகுணவர்த்தன இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்ததாக நமது கொழும்பு நிருபர் தெரிவிக்கிறார்.

### தேவாலய விவகாரம்

சென்ற நத்தார் தினத்தன்று யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளும் இன்னமும் வேலைக்குத் திருப்பி எடுக்கப்படவில்லையென பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

களும் அநேகர் உள்ளனர். காலியாக விருக்கும் அரசாங்கப் பதவிகளுக்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கும் இடமளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

கல்வி மந்திரிக்கு இம் மகஜர் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சரைப் பேட்டிகண்டு பேச்சுவார்த்தை நடாத்த வடமராட்சிச் சமூக சேவாசங்கம் முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமாக மேற்படி சங்கத்தலைவர் ஆசிரியர் திரு. ஆ. ம. செல்வத்துரை தலை

## ஈழநாடு விழா 'நாகேஷின் ருக்குகலியாணம்'

தென்னிந்திய திரையுலக கதைவசன கர்த்தாவும் இயக்குனருமான கே. பாலச்சந்தர்எழுதி நகைச்சுவை நடிகர் நாகேஷால் நடிக்கப்பட்ட 'ருக்கு கலியாணம்' என்ற நகைச்சுவை நாடகத்தை 14-ம் திகதி இரவு யாழ் திறந்தவெளியில் 'ஈழநாடு' கலைவிழாவில் யாழ் இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் அளிக்கிறார்கள். முழு விபரங்களுக்கும் தொடர்ந்து ஈழநாடு வாசியுங்கள்.

(கா. நி)

தலைமையில் செலலும்

இக் கூட்டத்தில் திருவாளர்கள் ஆர். விஜயரத்தினம் சீனித்தம்பி, சி. திரவியம், எஸ். சதானந்தன், வே. த. தணிகாசலம் ஆகியோரும் பேசினர்.

## எம்.பி. யிடம் கேள்வி கேட்டவர்

வல்வெட்டித்துறை, திங்கள்

மட்டக்களப்பு எம். பி. யிடம் கேள்விகள் கேட்ட ஒருவர் கேள்விகளுக்கான பதில் கிடைத்த பின்னர் மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

தொண்டமானாறு கெருடாவில என்ற இடத்தில கலந்துரையாடல கூட்டமொன்றின்போது மட்டக்களப்பு எம்.பி. திரு. இராசதுரையிடம் ஒருவர் சரமாரியாக கேள்விகளைக் கேட்டார். எம்.பி. பதிலிறுத்தவுடன் கேள்வி கேட்டவர் மயக்கமுற்றார் அவருக்கு உடனே முதலுதவி அளிக்கப்பட்டு பருத்தித்துறை எம்.பி. திரு துரைரத்தினம் முதலியவர்களால ஆஸ்பத்திரியில சேர்க்கப்பட்டார். ஆஸ்பத்திரியில அவர் மரணமானார்.

வடபகுதி பௌத்த பாடசாலை ஆசிரியர் பிரச்னை:

## நாகவிகாரை பிரதமகுரு அமைச்சருடன் பேசுவார்

அளவெட்டி, செவ்வாய்

வடக்கில்உள்ள பௌத்த பாடசாலை ஆசிரியர்களை நிரந்தர அரசாங்க ஊழியராக்குவதுசம்பந்தமாககல்வி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ். நாகவிகாரைபௌத்த பிரதம குரு கொழும்பு சென்றுள்ளார்.


இம்மாதம் முதலாம் திகதி வடபகுதியில் 3 பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றபோது அங்கு கடமையாற்றிவந்த ஆசிரியர்களைப் பொறுப்பேற்கவில்லை என்பது தெரிந்ததே

இதைக்கல்வி அமைச்சரிடம் எடுத்துக்கூறி ஆசிரியர்கட்கு உதவும் பொருட்டும், பௌத்த பாடசாலைக் கட்டிடத்தைப் புதுப்பிப்பது பற்றி பௌத்த காங்கிரஸாருடன்பேச்சுவார்த்தை நடத்தவும் பௌத்த பிரதம குரு கடவத்த நந்தாராமதேரோ கொழும்புசென்றுள்ளார்.

## தீவுப்பகுதி எம்.பி. கட்சியில் 5 பேர்

அல்லைப்பிட்டி, திங்கள்

ஊர்காவற்றுறை எம். பி. திரு. நவரத்தினம் தலைமையில் அமைக்கப்பட்ட புதிய இயக்கத்தின்சார்பில் ஐந்துக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் வருகிற பொதுத் தேர்தலுக்கு நிறுத்தப்படவிருப்பதாக இவ்வியக்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.



ஈழநாடு பத்தாண்டு நிறைவுவிழாவையொட்டி நடைபெறும் போட்டிக்குப் பரிசாக யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் மனேஜிங் டைரக்டரான திரு. எம். கனகசபை, ஈழநாடு விழாக்குழுத் தலைவரான டாக்டர் வி.ரி. பசுபதியிடம் தங்கப்பதக்கம் ஒன்றைப் பரிசாக வழங்குகையில்இப்படம் எடுக்கப்பட்டது. விழாக்குழு இணைச் செயலாளரான திரு. ..சதாசிவம் நடுவில்காணப்படுகிறார்.

## 'அரசியல் கட்சியை தடை செய்ய அதிகாரம் இல்லை'

### பிரதமர் கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு

எந்தவொரு அரசியல கட்சியையும் தடைசெய்யும் அதிகாரம் தனக்கு இல்லையென்றும், அப்படித் தடை செய்வதானால அதை அவசரகாலச் சட்டத்தின் கீழ்தான் செய்யமுடியுமென்றும், ஒரு அரசியல கட்சியைத் தடைசெய்வதற்காக அவசரகாலச் சட்டத்தை ஏற்படுத்தும் நோக்கம் தனக்கு இல்லையென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''பத்திரிகைகளும் பல ஸ்தாபனங்களும் கேட்டுக் கொண்டபடி இப் தி. மு. க. வை தடை செய்வதாக இருந்தால, இன்னும் இரண்டு கட்சிகளையும் அவ்வாறு தடைசெய்ய வேண்டி ஏற்படும்.''

## யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

பருத்தித்துறை பஸ்நிலையத்துக்கு அருகில் தபால் நிலைய சேமிப்புப் புத்தகம் ஒன்றைக் கண்டெடுத்து கந்தர்மடத்தைச்சேர்ந்த ம. புவனேந்திரன் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# 1 ரூபா செலவு செய்து 100 ரூபா பரிசு பெறுங்கள்! விஞேத உடை விண்ணப்பம் நாளை வரை ஏற்கப்படும்

## விழாவுக்கான இறுதி ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

யாழ்ப்பாணம், செவ்.

ஈழநாடு பத்தாண்டு நிறைவு விழாவுக்கு இன்னும் ஒருநாள் மட்டுமே இருக்கின்றது. நாளை ஒரு தினம் கழிந்தால் நாளை மறுதினம் ஈழநாடு பெருவிழா.

12, ம் 13, ம் 14ம்திகதிகளில் நடைபெறும் ஈழநாடு விழாவுக்கான சகலஇறுதிஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. ஈழநாடு விழாவை நினைவூட்டும் சுவரொட்டிகளும் வர்ண விளம்பரக் கொடிகளும் வீதியெங்கும் தொங்கவிடப் பட்டுள்ளன. சைக்கிள்கள், வாகனங்கள் எல்லாம் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன,

### பொலிஸ் ஒழுங்கு

விழாக் காணவரும் மக்களிடையே நெரிசலைக் கட்டுப்படுத்த கூடிய பொலிசாரை கடமையாற்றவிட வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் ஒழுங்குகளை மேற் கொண்டுள்ளது.

### மரதன் ஓட்டம்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல வீரர்களிடமிருந்தும் 26 மைல் மரதன் ஓட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் வந்து கிடைத்துள்ளன. இப் போட்டி 14ம் திகதி காலை 7மணிக்கு ஆரம்பமாகு இடம், போட்டி நடைபெறும் வீதி, போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் பற்றிய முழு விபரங்களும் நாளைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

### விஞேதஉடைப்போட்டி

விஞேத உடைப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. வயதுக்கட்டுப்பாடு எதுவுமின்றி நடைபெறும் இப்போட்டி 14ம், திகதி காலை 8 மணிக்கு ஈழநாடு காரியாலய வாசலில் ஆரம்பமாகும். இதற்கான விண்ணப்பங்கள் 12ம் திகதி நண்பகல் வரையே ஏற்றுக் கொள்ளப்படும். அலங்கார வண்டிக்கான விண்ணப்பங்களும் 12ம் திகதி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். விஞேதஉடை, வர்த்தக அலங்கார பவனி ஆகியவற்றில் கலந்து கொள்பவர்கள் பற்றிய முழு விபரங்களும் தொடர்ந்து வெளி வரும்

### மர்மமனிதன்

ஈழ நாடு மர்ம மனிதனைக் கண்டு பிடிப்பதற்கான விதிகளும் மர்ம மனிதனின் ஜோடிக் கண்களும் 13-ம் திகதி ஈழநாட்டில் வெளிவரும் 14-ம் திகதி காலையில் நடைபெறும் வர்த்தக பவனி ஊர்வலத்தில்சென்றுகொண்டிருக்கும் மர்மமனிதனைக் கண்டு பிடித்து 100 ரூபாரொக்கப்பணத்தைப் பெறும் அதிர்ஷ்டசாலியாக 13-ம் திகதி ஈழநாடு பத்திரிகையை வாங்குங்கள்! ஒரு ரூபா முதலீடு செய்து மர்மமனிதனைக் கண்டு பிடியுங்கள்!

### விளையாட்டுப் போட்டிகள்

உதைபந்தாட்டம்கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரை இறுதிப் போட்டிகளும், சம்பியன் போட்டிகளும் 12-ம் 13-ம் திகதிகளில் நடைபெறும்.

### உடற்பயிற்சிப் போட்டிகள்

யாழ், மாவட்டத்தைச் சேர்ந்த பலபாடசாலைகளும் கலந்து கொள்ளும் உடற்பயிற்சிப் போட்டிகள் 12-ம் திகதி காலையும் மாலையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில நடைபெறும்.

விழாபற்றிய முழுவிபரங்களும் கொண்ட விழா அனுபந்தம் 12-ம் திகதி ஈழநாடு பத்திரிகையுடன் வெளிவரும்.

## யாழ் மின்சாரக் கோளாறுபற்றி ஆராய மகாநாடு கூட்டுக

### உதவி மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏற்படும் மின்சாரக் கோளாறுகள் பற்றி அவசியம் ஆராய்ந்து அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வடபகுதியில் மின்சாரம் பெறும் நகரசபை, பட்டினசபை, கிராமசபைத் தலைவர்களைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டும்படி கோரும் பிரேரணையொன்றை யாழ். மாநரசபை உதவிமேயர் திரு. ஆ துரைராசசிங்கம்மேயர்திரு. நாகராசாவிடம் சமர்ப்பித்துள்ளார்.

காங்கேசன்துறை சீமேந்துக் கூட்டுத்தாபனத்திற்கு நாளொன்றுக்கு 3-மணித்தியாலயம் இரவு வேளைகளில் மேலதிக மின்சாரம் வழங்குவதற்காகவே, சுன்ஞகம்மின்சார காரியாலயத்திலிருந்து பெறும் மின்சாரத்திற்கு இப்படியான தோளாறு யாழ்ப்பாணப் பகுதியில் அடிக்கடி ஏற்படுவதா அவர் தமது பிரேரணையில் சுட்டிக்காடடியுள்ளார்.

மாதமொன்றுக்குச் சுமார் பத்து, பதினைந்து நாட்களில் மின்சாரம் பெறுவதில் சிரமம் ஏற்படுவதாகவும், இது பற்றி உள்ளூராட்சி அமைசருடனும் காணிநீர்ப்பாசன மின்சார அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உள்ளூராட்சி தலைவர்களைக்கொண்ட மாநாட்டைக்கூட்டும்படி உதவி மேயர் கேட்டுக்கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காணி

பிரதான வீதி கண்டி றோட்டுக்கு அண்மையிலுள்ள 2 பரப்பும் 2 குழியுமுள்ள குடியிருப்புக்காணி விற்பனைக்குண்டு. எந்த நேரமும் பஸ் போக்குவரத்துக்கு வசதி உள்ள இடம். விபரங்களுக்கு: சி. துரைசிங்கம், 58, நெடுங்குளம் றோட், அரியாலை, யாம்ப்பாணம். 1195

### வைத்தியம்

சிறுபிள்ளை வைத்தியம், வாதரோக வைத்தியம், படர்தாமரை, கரப்பன் முதலியவற்றிற்கு கைகண்ட மருந்துகள் பாவித்துக் குணப்படுத்தலாம். விபரங்களுக்கு: ச. இராசதுரை (அரசினர் நற்சாட்சிப்பத்திரம் பெற்றவர்) கிராமத் தொண்டர், ஆயுள்வேத டாக்டர், ஊரெழு வடக்கு, சுன்ணகம். 1196

### ஏலவிற்பனவு

யாழ் பாணம் 92, கண்டி வீதி திரு. த. சபாபதி அவர்களிடம் 1-1-68 க்கு முன் வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவை 30-6-69 திங்கட்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அதேயிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை.
ஏலவிற்பனவாளர்

1585

### தேவை

காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 12-30 மணிவரை ஒருவரும், பிற்பகல் 12-30 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை ஒருவருமாக இரு காசியர்கள் தேவை. ஒவ்வொருவருக்கும் பிணைப் பணம் ரூபா 500/- இருபாலாரும் நேரில் விண்ணப்பிக்கலாம். சன்லைட் டையேர்ஸ் அன் றைகிளீனேர்ஸ், ராணி தியேட்டருக்கருகாமை, யாழ்ப்பாணம்.

1197

## அறிவித்தல்

இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை (வரை) ஸ்தாபனம், வல்லை, உடுப்பிட்டி.

1. மேற்படி ஸ்தாபனத்தில் தங்களால் எடுக்கப்பட்ட பங்குகளின் பேரில் இதுவரை செலுத்தப்பட்ட பணம் நீக்கி மிகுதி செலுத்தவேண்டியிருப்பின் 1969-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ந் திகதிக்கு முன்னதாக நிலுவைப்பணத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2. மேற்குறித்த தவணைக்குள் நிலுவைப் பணத்தைச்செலுத்தவோ அல்லது வேறு யாருக்காவதுமாற்றிக் கொடுக்கவோ தவறின் முன் செலுத்தப்பட்ட பணத்தை இழந்தவர்களாகக் கருதப்படுவார்களென்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

1596 காரியதரிசி.


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

உயிரா மானமா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3 காட்சிகள், போயா, பிரீபோயா 4 காட்சிகள்.

நாகேஷ்—சுந்தரராஜன்



வசந்தா
மனோரமா
கருணாநிதி
சோ
நடித்த


## கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார் மாவட்டம் இலுப்பைக்கடவை கிராம சபையில் இலுப்பைக்கடவை கடற்கரை மீன்பிடி றோட்டு அமைப்பதற்கானசேவைக்கு ஒப்பந்த காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 19-6-69 காலை 9-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 18-6-69-ந் திகதி மாலை 4 மணிக்கு முன் எமது கிராம சபையில் ரூபா 50/- கட்டுப் பணமாகவும், ரூபா 10/- விண்ணப்பப்படிவப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளப் படவேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பெறுமதி ரூபா 10/-ம் எக்காரணம் பற்றியும் திருப்பிக் கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்களை எமது கிராம சபை அலுவலகத்தில் அல்லது மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) வே. கைலாயபிள்ளை,
கி.ச. தலைவர்.
கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை.
6-6-69 1601

## ஸ்தாபகர், பெற்றோர்தினவிழா

உடுவில், செவ்வாய்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஸ்தாபகர் நினைவு விழாவும் பெற்றோர்தின விழாவும் வித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் திரு. எஸ். கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உடுவில்கிராம சபைத்தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

பாடசாலைப்பிள்ளைகளுக்கு கல்விக்குரிய திறமைப்பரிசில்களும் ஸ்தாபகர்சபாபதி உபாத்தியாயர்ஞாபகார்த்தமாக பிரசாதமும் வழங்கப்பட்டன.


ராஜா 148வது தினம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை


## அறிவித்தல்

நல்லூர்கிராமசபைத் தலைவர் அவர்களால் 1969-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ம் திகதி புதன்கிழமை காலை 9-30 மணிவரையும் அரசாங்க நன்கொடை பெற்ற ''முருகன்'' றோட்டு வேலைக்கும், மீன்பிடி இலாகா நன்கொடை பெற்ற ''அரியாலை முனை'' றோட்டு வேலைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் ஏற்றுக் கொள்ளப்படும் ரூபா 50/- கட்டியதன் பேரில் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் நிரப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்துக்குரிய பத்திரங்கள் நல்லூர் கிராமசபை அலுவலகத்தில் 16-6-69 தொடக்கம் 24-6-69 பகல் 12 மணி வரையும் பத்திரம் ஒன்றுக்கு ரூபா 5/- செலுத்தியதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமான மற்றும் விடயங்களை நல்லூர் கிராமசபை அலுவலகத்தில் அல்லது உதவி உள்ளூராட்சி அதிபர் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

பொ. குமாரகுலசிங்கம்,
ஜே. பி.
தலைவர்,
நல்லூர் கிராமசபை.
கிராமசபை அலுவலகம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
8-6-69. 1599

## முல்லைத்தீவுப் பட்டணசபை கேள்வி விளம்பரம்

1969-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ந் திகதி காலை 10-00 மணிவரை பின் வரும் வேலைகளுக்கு முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் விபரங்களை இக் காரியாலயத்தில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

1. மின் நிலையத்தில் கிணறும், தண்ணீர் டாங்கியும், ஒரு அறை மலகூடமும் அமைத்தல்.

2. பஸ் நிலையத்திற்கு அருகாமையில் தண்ணீர்த் தேக்க மலகூடம் அமைத்தல்.

3. வண்ணாங்குளம், கள்ளப்பாடு வீதியில் நான்கு அறை வாளி மலகூடம் அமைத்தல்.

4. வெளிச்சவீட்டு றோட் திருத்த வேலை

5. ச[illegible] அமைத்தல்.

6. தபாற்கந்தோர் மீன்

## இன்றைய பலன்

10-6-69

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா

# சென். மேரிஸ், சென். அன்ரனிஸ் யுத்கவுன்சில், வல்வை கோஷ்டிகள் தெரிவு

## இரு மைதானங்களில் நடைபெற்ற ரசிப்பான போட்டி

(நமது விளையாட்டு நிருபர் ''தேவா''

யாழ்ப்பாணம், செவ். 'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் 'கால் இறுதிப்' போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களின் முழு விபரங்களும் வருமாறு:-

### சென் மேரீஸ் வெற்றி

'சென். மேரீஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், 'மயிலிட்டி புளூஸ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், சென். மேரீஸ் வெற்றி பெற்று 'அரை இறுதிப்' போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் மிகவேகமாக விளையாடினர். இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமாகியவுடன். சென். மேரீஸ் கோஷ்டி அடுத்தடுத்து இரு கோல்களை மிகசாதுரியமாகப் போட்டது. இக் கோல்களை அக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான, தாசியஸ், எட்வேட் ஆகியோர்போட்டனர்இதன்பின் மயிலிட்டி -புளூஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் ராயரட்ணமும் தமது கோஷ்டியின் சார்பில் ஒரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் சென். மேரீஸ் 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### வல்வைக் கோஷ்டி வெற்றி

'வல்வெட்டித்துறை யுனைட்டட்' விளையாட்டுக் கழகத்துக்கும் 'சிங்கிங்பிஷ்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கவர்ச்சியான போட்டியில் வல்வைக் கோஷ்டி வெற்றி பெற்று 'அரை இறுதிப் போட்டி'க்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி ஆரம்பமாகி 20 நிமிடங்கள்வரை 'சிங்கிங்பிஷ்' கோஷ்டி மிகச் சாதுரியமாக விளையாடிய போதும், வல்வைக்கோஷ்டியின் பின்னணி வீரர்களின் கடும் தாக்குதல்களால் இக் கோஷ்டியினர் கோல்கள் எதுவும் போடமுடியவில்லை. இடைவேளையின்போது வல்வைக் கோஷ்டி 1-0 கோலைப் பெற்றிருந்தது. இடைவேளையின்பின் இக்கோஷ்டி மேலும் மூன்று கோல்களை மிகலாவகமாகப்போட்டது. இக்கோல்களை ஜெயபாலசிங்கம், அருணாசலம், தங்கவடிவேல் ஆகியோர் முறையே 2, 1, 1 எனப் போட்டனர். வல்வைக் கோஷ்டியின் வெற்றிக்கு இக்கோஷ்டியின் கோல் காப்பு வீரர் ரட்ணசிங்கமும் ஒரு காரணமாய் இருந்தார். போட்டி முடிவில் வல்வெட்டித்துறை யுனைட்டட் கோஷ்டி 4-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### யுத்கவுன்ஸில் வெற்றி

'யுத்கவுன்சில்' விளையாட்டுக் கழகத்துக்கும், யாழ். பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் 'யுத்கவுன்ஸில்' கோஷ்டி வெற்றிபெற்று 'அரை இறுதி'ப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும், இடைவேளை வரை கோல்கள் எதுவும் போடாமல் நன்முய் விளையாடினர். இடைவேளையின் பின் 'யுத்கவுன்சில்' கோஷ்டிக்கு கிடைத்த ஒரு பெனல்டி'யை, இக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் அகஸ்ரின் அடித்து கோலாக்கினுர். பொலிஸ் கோஷ்டிக்கு பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதினுல். யுத்கவுன்சில் கோஷ்டி 1-0 கோலால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. எம். டி

அன்ரனிஸ் கோஷ்டி 3-2 கோல்களை பெற்றிருந்தது. இடைவேளையின்பின் கிருஸ்கொப்பஸ் கோஷ்டி மேலும் ஒரு கோலைப் போட்டது. ஆட்டம் முடிவடையும் போது இரு கோஷ்டிகளும் சமமான (3-3 கோல்களைப் பெற்றமையால், மத்தியஸ்தரால், மேலதிக நேரம் வழங்கப்பட்டதால், சென். அன்ரனிஸ் கோஷ்டி இச் சந்தர்ப்பத்தில் மேலும் ஒரு கோலைப் போட்டு 4-3 கோலால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்தது சென் அன்ரனிஸ் கோஷ்டியின் சார்பில்கிளிபேட்-2 ஜோசப் 1, தவானந்தன் - 1 எனக் கோல்களைப் போட்டனர். கிருஸ்கொப்பஸ் கோஷ்டி சார்பில், சிவஞானம், தெய்வேந்திரா, தர்மராஜா ஆகியோர் கோல்களைப் போட்டனர். இக்கோஷ்டியின் பின்னணி வீரர் பத்மநாதனின் விளையாட்டு ரசிப்பாகக் காணப்பட்டது.

இப் போட்டிக்கு திரு.பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

அரை இறுதிப் போட்டிகள் யாவும்இன்றுகோட்டை மைதானத்தில் நடைபெறும்.

# கரபந்தாட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற கோஷ்டிகள்

யாழ்ப்பாணம், செவ் 'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்றுவரும் கரபந்தாட்டப்போட்டியில் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற கோஷ்டிகளின் விபரங்கள்:

### காந்திஜி தம்பாட்டி வெற்றி

'காந்திஜி தம்பாட்டி' விளையாட்டுக்கழகத்துக்கும், 'கோப்பாய்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் தம்பாட்டி விளையாட்டுக்கழகம் 15 7, 15-9 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். சதாசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### மோகனதாஸ் வெற்றி

'மோகனதாஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், 'முத்தமிழ்மன்ற'க் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், மோகனதாஸ் விளையாட்டுக் கழகம், 15-10, 15-03புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. கே. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### பொம்பஸ் வெற்றி

'பொம்பஸ்' கலாநிலையத்துக்கும், இந்துவிளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடை

15—10 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. எஸ். சதாசிவம் மத்தியஸ்தம்வகித்தார்.

### வல்வைகோஷ்டி வெற்றி

வல்வெட்டித்துறையுனைட்டட் கோஷ்டிக்கும் வளர்மதி படிப்பகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறை யுனைட்டட் கோஷ்டி 15-13 15-10 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்

### யாழ்கழகம் வெற்றி

யாழ் கரபந்தாட்டக் கழகத்துக்கும் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'செட்டப்' பாட்டியில் யாழ் கழகம் மிகவும் திறமையாக விளையாடி 15 10, 15-5 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கும் திரு. குமரையா மத்தியஸ்தர் வகுத்தார். (தே. நி

0 0 0

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செவ். 'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனோரமா
கருணாநிதி
சோ
நடித்த

# ஆலயம்

மகத்தான 2-வது வாரம்
இங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது

ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்த

# பொம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ.
இசையமைப்பு வி. குமார்



(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
**ரஞ்சனா தியேட்டர்**
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
**தெய்வத்தின் தெய்வம்**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Robert Redford, Janefonda
in
**BARE FOOT IN THE PARK**
(Techni Color)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
James Coburn,
Dick Shawn
in
**What did you do in the war Daddy?**
(Color)


தல்.

3. வண்ணாங்குளம், கள்ளப்பாடு வீதியில் நான்கு அறை வாளி மலகூடம் அமைத்தல்.

4. வெளிச்சவீட்டு ரோட் திருத்த வேலை

5. சந்தையில் கடைகள் அமைத்தல்.

6. தபாற்கந்தோர் மீன் பிடி வீதி திருத்தவேலை.

ம. சு. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை, முல்லைத்தீவு.

பட்டணசபைக்
காரியாலயம்,
முல்லைத்தீவு,
5-6-69. 1600

## பணத்துடன் பஸ் நிலையத்தில் கைது

யாழ்ப்பாணம், செவ்.

தெல்லிப்பளையிலுள்ள ஒரு தேநீர்க் கடையில் பணம் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை யாழ். பஸ் நிலையத்தில் வைத்து இரவு நேரம் கைது செய்தார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் எதிரிசிங்கா கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 125 ரூபா பணத்தையும் பொலிஸார் மீட்டனர். காங்கேசன்துறை பொலிஸார் விசாரணை நடாத்திவருகின்றனர்

(சா. நி)

## இன்றைய பலன்

10-6-69

வைகாசி மாதம்

28-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

திதி- ஏகாதசி இரவு 12-25 மேல் துவாதசி.

நட்சத்திரம்- ரேவதி பகல் 9-11 மேல் அச்சுவினி.

ராகுகாலம்- 2-52 — 4-22.

சுபநேரம்- 10-22 — 11-52.

இன்று பிறந்தவர்களுக்கு சமயோசிதமான பலனையே குறிப்பிடுகின்றது. சிலர் வாழ்க்கையில் திடீர் மாற்றங்களுக்கும் இடமேற்படமுடியும் உஷ்ணம் சம்பந்தமான ரோகம் ஏற்படாவண்ணம் பாதுகாத்துக்கொள்ளவும். மனதில் போராட்டங்களுக்கு இடமளிக்காதிருக்கவும். தொழிலாளர்கள் மேலதிகாரிகள் மோதல் தவிர்க்கப்படவேண்டும்.

மேஷம்- இன்னலின் பின்னல், இதயபாரம்.
ரிஷபம்- திடீர் திருப்பம், திரவிய இலாபம்.
மிதுனம்-சூழ்ச்சி மிகுதி, சோதனைக்கட்டம்.
கடகம்- வாகன நலன், வாழ்விலும் திருப்பம்.
சிம்மம்- இன்பம் பொங்கும், இனசன மகிழ்ச்சி.
கன்னி- துன்பத்தின் நிழலாட்டம், துயர்படிந்த நாள்.
துலாம்- இருமனம் கலக்கும், இனிமையும் பிறக்கும்.
விருச்சிகம்- சிநேகிதர் தொல்லை, கடன் கவலை.
தனுசு- ஊதியம் பெருகும், உற்சாக மிகுதி.
மகரம்- பண வரவு, பிரயாணம்.
கும்பம்- உடல் நலன், நேர்மை மிகுதி.
மீனம்- வரவில் தாமதம், மந்தநிலை.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

டி'யை, இக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் அகஸ்ரின் அடித்து கோலாக்கினார். பொலிஸ் கோஷ்டிக்கு பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதினால், யுத்கவுன்சில் கோஷ்டி 1-0 கோலால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எம். டி. தம்பிராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### சென். அன்ரனிஸ் வெற்றி

சென். அன்ரனிஸ் கோஷ்டிக்கும், தெல்லிப்பளை 'கிரூஸ்கொப்பஸ்' கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடுமையான போட்டியில் சென். அன்ரனிஸ் வெற்றி பெற்று 'அரை இறுதிப்' போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி ஆரம்பமாகியவுடன் சென். அன்ரனிஸ் கோஷ்டி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது. இதன் பின் கிரூஸ்கொப்பஸ் கோஷ்டியும் ஒன்றின்பின் ஒன்றாக இருகோல்களைப்போட்டது. இடைவேளையின் போது சென்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 10—6—69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 வாத்தியஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

கழகம், 15-10, 15-03 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. கே. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### பொம்பஸ் வெற்றி

'பொம்பஸ்' கலாநிலையத்துக்கும், இந்துவிளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்றபோட்டியில், பொம்பஸ் கோஷ்டி, 15-12, 15-11 புள்ளிகள்வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தம் வகித்தார்.

### ஊர்காவற்றுறை வெற்றி

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் கோஷ்டிக்கும், ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில்நடைபெற்ற கடும் மோதலில் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் 15—8, 9—15,

வகுத்தார். (தே. நி)

0 0 0

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செவ்.

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் கரபந்தாட்டப் போட்டியில் கீழ் வரும் கோஷ்டிகள் இன்று யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் மோதுகின்றன,

பி.ப. 4-30 க்கு: கிறீன் பீல்ட் வி. க. சென் நிக்கலஸ் வி. க.

பி.ப. 5-30க்கு: நீர்வேலி வி. க. ஏ — காந்திஜி தம்பாட்டி வி. க.

பி. ப. 6-30க்கு: மோகனதாஸ் வி. க — சென் பீற்றர்ஸ் ஏ.

பி.ப. 7-30க்கு: தையிட்டி ஸ்ரார் வி, க. — கலா நிலையம்.

(தே. நி)

## நவாலி பாரதி ச. ச. நிலைய விளையாட்டுபோட்டி முடிவுகள்

சித்தன்கேணி, திங்.

நவாலி பாரதி சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு விளையாட்டுப் போட்டி நவாலிக் கிராம சேவகர் திரு. கே. செல்வராஜா தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இவ்விழாவில் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

மரதன் ஓட்டம்: கே. பாலசுப்பிரமணியம், எஸ். சிவானந்தன், எஸ். பிறைசூடி.

30 மைல் சைக்கிள் ஓட்டம்: கே. சிவபாலன், என். நித்தியானந்தன், கே. செல்வராசா.

100 யார் ஓட்டம் (மேற்பிரிவு): கே. செல்வராசா, ரி. அருணந்தி, என். சின்னத்துரை.

100 யார் ஓட்டம் (12 வயதுக்குக் கீழ்): கனகசபாபதி, ரி. தேவராசா, என். தங்கத்துரை.

குண்டெறிதல்: கே. செல்வராசா, என். சிறீமுருகன், கே. கௌரிகாந்தன்.

தடை ஓட்டம்: கே. செல்வராசா, ரி. அருணந்தி, எஸ். பாலசிங்கம்.

சைக்கிள் தடை ஓட்டம்: கே. அரியம்.

விநோத உடைப் போட்டி: என். ஞானசேகரம், எஸ். சிவகடாட்சம், எஸ். சுப்பிரமணியம், எஸ். திருஞானசம்பந்தர்.

நீளம் பாய்தல்: எம். தர்மலிங்கம், கே. குணரத்தினம், என். சிறீமுருகன்.

1 மைல் ஓட்டம்: கே. சிவானந்தன், கே. பாலசுப்பிரமணியம், கே. திருஞானசம்பந்தர்.

சங்கீதக் கதிரை: எஸ். திஸ்ஸவீரசிங்கம்.

கயிறு இழுத்தல்: மணமானவர்கள்.

கிறீஸ் கம்பம் ஏறுதல்: கே. வில்வராசா.

வாண வேடிக்கை: 1. எம் துரைரத்தினம், 2. ஆர். நடராசா, வி. பொன்னம்பலம், பி. பரமு, என். இராசரத்தினம், எம். துரைசிங்கம் (சம இடத்தைப் பெற்றவர்கள்).

## நாவலர் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைத்திறப்பு விழாவை முன்னிட்டு கைதடி இந்து வாலிபர் சங்கத்தினர் 25 வயதுக்குட்பட்டவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்றை நடத்துகின்றனர். இப்போட்டியில் பரிசு பெறுபவர்களுக்கு யாழ்ப்பாணத்தில்நடைபெறும் நாவலர் மகாநாட்டில் பரிசில்கள் வழங்கப்படும். (கா. நி(

## உற்சவம்


நெடுங்கேணி, திங்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோயில் திருவிழா இம்மாதம் 14ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தீர்த்தம் 29ந் திகதி நடைபெறும்.


# யாழ். வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ எம். என். நம்பியார்
★ சிவகுமார்
★ சௌகார்ஜானகி ★ மனோரமா
★ பேபி பத்மினி ★ ராஜசுலோசனா
மற்றும்பலர் நடித்த



# திருமால் பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னாமிலிருந்து

# 25 ஆயிரம் அமெரிக்க படைகள் ஆகஸ்ட் இறுதிக்குள் வாபஸாகும்

## 'மிட்வே' தீவில் அதிபர் நிக்ஸன் இதை அறிவித்தார்

### கலப்பு அரசு யோசனைக்கு எதிர்ப்பு

வாஷிங்டன், ஜூன் 9

தென்வியட்னாமில் தற்பொழுது இருந்துவரும் அமெரிக்க படை வீரர்களில் 25 ஆயிரம் பேர் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் விலக்கிக்கொள்ளப்படுவார்கள்.

இத்தகவலை அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் அறிவித்துள்ளார். இன்னும் 30 நாட்களின் பின் இந்த வீரர்கள் விலகிச்செல்ல ஆரம்பிப்பார்கள். அதிபர் நிக்ஸனின் இந்த முடிவுக்கு தென்வியட்னும் அதிபர் வான்தியுவும் சிபாரிசு செய்திருக்கிருர். தென் வியட்னுமிலுள்ள அமெரிக்க படைத் தளபதியும் இந்த முடிவை ஏற்றுக் கொண்டிருக்கிருர்.

பசுபிக்சமுத்திரத்திலுள்ள மிட்வே தீவில் தென்வியட்னும் அதிபர் வான்தியுவுடன் அதிபர் நிக்ஸன் ஆலோசனைகள் நடத்தினர். ஆலோசனைகள் நடத்திய பின்னர் இரு அதிபர்களும் தற்பொழுது தமது நாடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

ஆலோசனைகளின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தென் வியட்னுமில் கூட்டு ஆட்சி ஏற்படவேண்டும் என்று தேசிய விடுதலை முன்னணி தெரிவித்த யோசனையை இரு தலைவர்களும் நிராகரித்துள்ளனர்.

அதிபர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் இடையில் அதிபர் நிக்ஸன் அமெரிக்க படைகளில் 25 ஆயிரம் பேர் ஆகஸ்ட் முடிவுக்குள் தென்வியட்னுமிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர்களின் இடத்தை தென்வியட்னும் படைகள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அறிவித்தார்.

25 ஆயிரம் படைகளை விலக்கிக்கொள்வதென்று தாம் செய்த முடிவுக்கு தென்வியட்னும் அதிபர் வான்தியூவும் சிபாரிசு செய்ததாகவும் தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க தளபதியும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அதிபர் நிக்ஸன் நிருபர்களிடம் கூறினர். சுமார் 200 நிருபர்களின் மத்தியில் அதிபர் நிக்ஸன் பேசினர்.

நிலைமையைப் பொறுத்து அவசியமானல் மேலும் அமெரிக்கப்படைகளை விலக்கிக்கொள்வது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

வியட்னுமில் அமைதி ஏற்படுவதற்கு இந்தப் படை விலக்கம் பெரிதும் உதவியாகவிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலைமையைத் தொடர்ந்து அடிக்கடி ஆராய்ந்து வருவோம், மேலும் படைகளை விலக்கிக் கொள்வது மூன்று முக்கிய அம்சங்களின் அடிப்படையில் அமையும், தென் வியட்னும் படைகள் பயிற்சிகளிலும் படைக்கருவிகளைப் பயன்படுத்துவதிலும் ஏற்படும் முன்னேற்றம் முதல் அம்சம்.

இரண்டாவது அம்சம் பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் ஏற்படும் அபிவிருத்தி பற்றியது. மூன்ருவது, வட வியட்னும், வியட்காங்கியரின் நடவடிக்கைகளைப் பொறுத்தது'' இவ்வாறு அதிபர் நிக்ஸன் கூறினர்.

தென்வியட்னும் மக்கள் அமெரிக்கர்களின் பொறுப்புகளை ஏற்று நடத்துவதற்கு தயாராகவேண்டும் என்று ஆர்வம் பலகாலமாக இருந்துவந்துள்ளதாக அதிபர் தியுகுறிப்பிட்டார்.

## விவசாயத்தில் நம் நாட்டின் முன்னேற்றம்

### பொலிஸ் அதிகாரி மகிழ்ச்சி

கோப்பாய், திங்கள்

''ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டின் விவசாயத்திலும் கைத்தொழிலிலுமே தங்கியுள்ளது. எனவே அவற்றுக்கு முக்கியத்துவமளிக்கப்படவேண்டியது அவசியம். மற்றும் நாடுகளிலும் நமது நாடே இந்த ஆண்டு விவசாயத்துறையில் முன்னேறியுள்ளது. குறிப்பிடத்தக்கதும் பெருமைப் படவேண்டியதுமாகும்.''

கோப்பாய்வடக்குஅம்பாள் இளைஞர் விவசாயக் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து பேசுகையில் கோப்பாய் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி திரு. என். கே. தர்மபாலா மேற்கண்டவாறு கூறினர்.

கழகத்தலைவர் திரு. எஸ். ரி. அரசபிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திரு. தர்மபாலா தொடர்ந்து பேசுகையில்,

' எமது கிராமமக்கள் விவசாயத்தில் போதியளவு பிரயாசை இன்னும் எடுப்பதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் யாழ்ப்பாணக் குடாநாடு விவசாயம் செய்வதற்கு கஷ்டமான பிரதேசமாக விருப்பதேயாகும். ஆனல் இக்குறை மகாவலி கங்கையை வடபிரதேசத்துக்கு திருப்பும் அரசாங்கத்தின் திட்டம் நிவிர்த்தியடைந்ததும் நிறைவேறுமெனக் கருதுகிறேன். ஆகவே நம் நாடு மற்றைய பிரதேசங்களுக்கு விவசாயத்துறையில் முன்னேற்றமடைய வழி காட்டவேண்டும் என்ருர்.

அடுத்து கோப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. பரமானந்தராசா பேசும்போது, நம் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள உவர் நிலம் வெகுவிரைவில் நல்ல முறையில் விவசாய நிலமாக்கப் பட வேண்டுமெனவும், மின்சாரமூலம் விவசாயத்திற்கு தேவையான வசதிகள் செய்தளிக்கப்படுமெனவும், வெகுவிரைவில் இக் கிராம விவசாயிகளுக்கென வாரச் சந்தை நிறுவப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இவ்விழாவையொட்டி விவசாயப் பொருட்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வலி கிழக்கு காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை, யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. வி. மாணிக்கவாசகர், யாழ். மாவட்ட தலைவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, செல்வி. ஜெனற்றாஸ்நிக்

### பாதரசத்தில் தங்கம்

புதுடில்லி, ஜூன். 9

பாதரசம் எவ்வாறு தங்கமாகமாறுகிறதுஎன்பதை ஒரு வைத்தியர் செய்து காட்டினர். ஏ. பி. ஆச்சாரியா என்ற இந்த வைத்தியர் உருவாக்கிய தங்கத்தை சோதித்தபோது அசல் தங்கமாகவே இருந்ததாம். இதனை குஜராத் மந்திரியொருவரும் பார்த்தார். இப்பொழுது இத்தங்கம்ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப் பட்டுள்ளது.

சோவியத் தலைவர்கள்மீது

### சீன மீண்டும் சீறுகிறது

ஹங்காங், ஜூன், 9

சீன மீண்டும் சோவியத் தலைவர்களை வன்மையாகக் கண்டித்துள்ளது.

சீனவில் வெளியாகும் பத்திரிகைகள் பலவும்சோவியத் தலைவர்களைக் கண்டித்துள்ளன. சீனமக்கள் வெளியிலிருக்கும் எதிரிகள் பற்றியும் உள்ளே இருக்கும் எதிரிகள் பற்றியும் எச்சரிக்கையாக

### மத ஒழுக்கம் அவசியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இன்றைய முஸ்லிம்களின் மத்தியிலே அனுச்சாரங்களும் அனுவசியமான செய்கைகளும் மிக மலிந்து போய்விட்டன. நாயகம் அவர்களுடைய காலத்தில் எவ்வாறு அராபிய மக்கள் பாவச் செயல்களிலும் மௌட்டீகத்திலும் இருந்து வந்தார்களோ அதேபோன்ற ஒரு மடமை எம்மீது குடிகொண்டிருக்கிறதென்ருல் அது மிகையாகாது. நம்மவருள் எத்தனையோ குடும்பங்கள் மிகவும் கஷ்டத்துடன் வாழ்கின்றன. எந்தத் தனவந்தரும் அந்தக் குடும்பங்களைக் கவனிப்பதேயில்லை. அண்ணல் நபி (ஸல) முதலிலே செய்த பெருஞ்செய்கை தமது அருமை சதீஜா (றழி) யின் உத்தரவுடன் அவர்களது பெருந்திரவியத்தை ஏழை மக்களுக்குப் பங்கிட்ட சம்பவமேயாகும்.


இவ்வாறு கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மீலாத்விழாவில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் ஜனுப் எம். ஜீ. பஸீர் பேசுகையில் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில், அண்ணல் நபி (ஸல்) போன்று நாமும் வாழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### பெற்ருேருக்கு ஒருவாய்ப்பு

சுழிபுரம், செவ்வாய்

'பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகளின் ஆக்கபூர்வமான செயல்களை அவ்வப் பாடசாலைகளில் நடைபெறும் கண்காட்சி விழாக்களின்போதே பெற்ருேர்கள் முதல் யாவரும் காணக்கூடிய வாய்ப்பு உண்டு. பெற்ருேர்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பிள்ளைகளின் திறமையைக் கண்டுகளிக்க முன்வர வேண்டும். கல்விப்பகுதியினரின் நூற்றுண்டு விழாவின் போது நடைபெறு இக் கண்காட்சி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் காட்டுவதுடன் வருங்கால முன்னேற்றத்துக்கும் உதவியாகவுள்ளது' என பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியினரால் நடத்தப்பட்ட கலை, கைப்பணி விஞ்ஞானப் பொருட்காட்சியை திறந்து வைத்துப் பேசிய வடமாகாண வித்தியாதிபதி திரு தணிகாசலம் குறிப்பிட்டார், விழாவுக்கு கல்லூரி



'சகல பிரச்னைகளுக்கும் புரட்சி ஒன்று தான் வழி' என்று கூறும் பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நா. சண்முகதாசன் சமீபத்தில் யாழ். நகர மண்டபத்தில் 'இலங்கை அரசியலும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்தினர். —படம்- ஏ:வி.எம்.

## மதமாற்றம் செய்வது கேவலமான செயலாம்

அல்லைப்பிட்டி, திங்கள்

இந்துமதம் எப்போது தோன்றியதென்பதை நாம் கணக்கிட்டுஅறிந்துகொள்ள முடியாது. அதுபண்டைய பழம் பெரும் சமயம் இதனை காலத்தால் அழிக்க முடியாது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமல்ல உலக நாடுகள் முழுமையும் முற்காலத்தில்இந்து சமயம் பரவி இருக்கின்றது. அதற்குச் சரித்திர சான்றுகள் ஏராளம் உள்ளன.

மேற்கண்டவாறு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இந்தோனேஜியாவின் பாலித்தீவில் கண்டெடுக்கப்பட்ட விநாயகவிக்கிரகத்தை பொதுமக்களின் தரிசனத்துக்காக வைத்து தலைமையுரை நிகழ்த்திய திரு. ஆனந்தாகுக் குறிப்பிட்டார்.

விநாயக விக்கிரகம் பரந்தனிலிருந்து கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபம் வரை ஊர்வலமாக வந்தடைந்தது.

திரு. குக் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறிய ப்பட்ட. ஆனல் இந்து மதமோ அப்படி பரப்பப் படவில்லை. இலங்கையிலுள்ள மக்கள் முன்பு இந்துக்களாய் இருந்துள்ளார்கள். மேல் நாட்டவரினதும் பௌத்த மதகாரர்களினதும் வருகையினலுமே அவாகள் மதம் மாறியுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

மதமாற்றம் செய்வது ஒரு கேவலமான செயல். எந்த மதமாயிருந்தாலும் தத்தமதுமதத்தின் கோட்பாட்டின் படியே செயல் பட வேண்டும் முன்பொரு காலத்தில் இந்தியா முழுமையுமே இந்துமதம் பிரசித்தம் அடைந்திருந்தது அக்காலத்து மன்னர்கள் இந்து மதத்தை கண்ணைப்போல பாதுகாத்து வந்துள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தோனேஜியாவில்இந்துமதம் செழிப்புற்று விளங்கியுள்ளது. அதைப் போலவே உலகெங்கும் இந்து மதம்

'தென்னிலங்கையில் சிலர்

## தி. மு. க. பெயரைச்சொல்லி அரசியல்பிழைப்பு நடத்துகிறார்கள்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தி.மு.க. பெயரைச்சொல்லி அரசியல்பிழைப்புநடத்துகிறர்கள்’

## அண்ணு சிலை திறப்புவிழாவில் இராசதுரை எம். பி

உடுப்பிட்டி, திங்கள்

‘இலங்கையிலுள்ளசில அரசியல் வாதிகள் திராவிட முன்னேற்றக்கழகத்தின் பெயரைவைத்துக் கொண்டு அரசியல் பிழைப்பு நடாத்தி வருகின்றனர். எமது நாட்டு அரசாங்கம்வேறு மற்றநாட்டு அரசாங்கம் வேறு இதனை நன்ருகத் தெரிந்துகொண்டும் சிங்களத்தலைவர்கள் தி. மு. க. படையெடுக்குமெனத் துவேஷப் பிரசாரம் செய்து வருகின்றனர்’’.

இவ்வாறு மட்டக்களப்பு முதலாவது எம் பி திரு செ. இராசதுரை கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள காலஞ் சென்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணுவின் முதல் சிலையைத்திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர். இச்சிலை திறப்பு விழா திரு கி. தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

அண்ணுசிலையை உருவாக்கிய பிரபல ஓவியரும், முறிவு வைத்திய நிபுணருமான திரு. கு. சிவசம்புவிற்கு உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். மட்டக்களப்பு எம்.பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

‘‘தமிழகத்திற்கு அப்பால் கடல் கடந்து நம் நாட்டில் முதல் அண்ணு சிலையைத் திறந்து வைத்துக் கரணவாய் சாதனை செய்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அண்ணுவுக்கு நாம் சிலையமைப்பதில் தென் இலங்கையில் கருத்து வேற்றுமை தோன்றியுள்ளது. நாம் செய்யும் காரியங்களில் தென்னிலங்கை மக்களும், பத்திரிகைகளும் என்ன நினைக்கின்றன நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் எமது கருத்துக்களைத் துணிகரமாகக் கூறத் தயங்கக் கூடாது. அண்ணுபற்றிய பொய்ப்பிரசாரங்கள் அதனைப் பரப்புபவர்களுக்கு வீழ்ச்சியையே கொடுக்கும்.

பயந்து வாழ நாம் பழகிவிட்டதாலே தான் கஷ்டமான சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளோம். தமிழக அரசியல் வானில் சகலகலா வல்லுனராகத்திகழ்ந்த அண்ணு ஈழத்துத் தமிழினத்தின் இன்னல்களை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். பிரபல சிங்கள நடிகர் ஒருவர் தென் இந்தியத் தமிழப் படங்களைத் தடைசெய்யக் கூடாதென்றும், சினிமாக் கலை வளரத் தமிழகப் படங்கள் அவசியமென்றும் கருத்துவெளியிட்டிருந்தார். இதனைச் சிங்களப் பத்திரிகைகள் மூடிமறைத்து விட்டன

அண்ணு சமுதாயச் சீர்திருத்தத்திற்காக முயன்ருர், சமுதாயத்திருத்தத்தில் இறங்குவோர் வெற்றி பெறுவது கிடையாது. ஆனல் அண்ணுமுயற்சியினுல் வென்ருர். வெற்றி என்பது மக்கள் அவருடைய எண்ணத்தை உணரச் செய்வதேயாகும். தமிழ் நாட்டில் ஆலயக்கதவுகள் திறக்கப் பட்டுவிட்டன. அங்கே சாதிக் கட்டு கோப்புகள் விலக்கி வருகின்றன. எழுத்து, பேச்சு மூலம் தமிழுக்குப் புத்துணர்ச்சி கொடுத்த அறிஞர் எதிரிகள் வியக்கும் வண்ணம் தமிழைக் கையாண்டார். தமிழ்த் தொழிலாளிகளால் தான் தமிழ் காப்பாற்றப்பட்டது.

### உபசபாநாயகர் பெருமை

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:—

இலங்கையின் முதலாவது அண்ணுசிலைஎமது தொகுதியில் திறந்து வைக்கப்படுவதை அறிந்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். அண்ணு உரிமைப் போருக்கு வழிகாட்டியவர் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானவர். அண்ணு, இந்திய சுதந்திரத்தின் ஒரு பகுதி மட்டுமல்ல அந்தநாட்டுக்கே பரவலான சுதந்திரத்திற்கே போராடினுர். அவருடைய ஆணித்தரமான கொள்கைகள் வாழ்க்கையில் புதியபாதை காட்டி நல்வழியில் திருப்புவன.

இலங்கையின் சுதந்திரம் யாருக்குஎன்பதே இன்றுள்ள கேள்வி சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க வேண்டும். அண்ணு நாஸ்திகரல்ல அண்ணு இறப்பதற்கு முன் வாசித்ததாகச் சொல்லப்படும் புரட்சித் துறவி என்னும் நூலைக் ‘‘குமுதம்’’ இதழ் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. இதிலிருந்து அவர் ஒருசமயவாதி என்பதை உணரமுடியும்.

மூடக்கொள்கைகளை அகற்றினுலே சமயம் நிலைத்து வாழும். இதற்காக அண்ணு உழைத்ததால் அவரை நாஸ்திகர் எனக்கருதினர். மக்களுக்கு வாழ வழிகாட்டும் கருவி மதம், மதத்திலுள்ள குறைபாடுகளைப் போக்கிப் புனிதமாக்க முயன்ருர். அண்ணுவைத் தூற்றுபவர்கள் மத்தியில் தான் அவரது சிலையை நிறுவி அதனை விளக்கவேண்டும்.’’

### தமிழகம் அமைத்தவர்

தமிழரசுக் கட்சி உடுப்பிட்டிக் கிளைத்தலைவர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில், பலர் அண்ணுசிலை நிறுவக் கங்கணம் கட்டியும் இறுதியில் கரணவாயே வென்றது. பருத்தித்துறையில் அண்ணு சிலை நிறுவ முடிவு செய்தும் பொருளாதாரக் குறைவினுல் முயற்சி கைகூடாமல் போய்விட்டது. தமிழனுக்கெனத் தமிழகம் அமைத்துக் கொடுத்த அறிஞர் அண்ணுவை எவரும் மறுக்க முடியாது. இலங்கையில் நாம் ஒதுக்கபபட்டுவருகின்ரேம். தமிழினம் கட்டுப்பாட்டுடன் வாழப்பழக வேண்டும். அப்பொழுது தான் நாம் எமது உரிமைகளைப் பெறமுடியும் என்ருர்.

மற்றும் திருவாளர்கள் பொன். குமாரசாமி, பண்டிதர் வீ. பரந்தாமன், மனோகரன், சி. திரவியம், வித்துவான் க. ந. வேலன் உட்பட வேறு பலரும் பேசினர்.

கண்டித்துள்ளது.

சீனுவில் வெளியாகும் பத்திரிகைகள் பலவும்சோவியத் தலைவர்களைக் கண்டித்துள்ளன. சீனமக்கள் வெளியிலிருக்கும் எதிரிகள் பற்றியும், உள்ளே இருக்கும் எதிரிகள் பற்றியும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று சீன பத்திரிகைகள் எழுதியுள்ளன.

## கிறிஸ்தவ சபைகள் கண்டனம்

சாலிஸ்பரி, ஜூன் 9

ரொடீஷியாவுக்காகஅயன் ஸ்மித் தயாரித்துள்ள புதிய அரசியல் திட்டத்தை ரொடீஷியாவிலுள்ள டச்சுத்தேவாலயத்தைத் தவிர மற்ற எல்லா தேவாலயசபைகளும் கண்டித்துள்ளன.

கிறிஸ்தவ போதனைகளுக்கு இது முரண்பட்டது என்று அவைகள் தெரிவித்துள்ளன.

## திறந்தவெளி அரங்கு

அல்லைப்பிட்டி, திங்கள்

நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் திறந்தவெளியரங்கு அன்றை ...மைப்பதற்கான முயற்சியில் நெடுந்தீவு கிராமசபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## சைவசமயம் வளர வழி

வெள்ளவத்தை, திங்கள்

சிறுவர்களுக்கு தேவார திருவாசகங்களை முறையாக ஓதும்படி சொல்லிக்கொடுத்தால் அவர்கள் ஒழுக்க சீலமுள்ள பரம்பரையையே உருவாக்கிவிடுவார்கள். தேவாரங்கள் எமது உள்ளத்தைத் தொட்டுத் தூய்மைப் படுத்துகின்றன. அன்புமிக்க ஆத்மீக வாழ்க்கைக்கான சரியானபாதையைஅவை எமக்குக் காட்டுகின்றன. என கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபைத் தலைவர் திரு. இரா. சயாநாயகம் கொழும்பு கப்பித்தாவத்தையிலுள்ள மேற்படி சபை மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர்கள் தேவார மனனப்போட்டிப் பரிசளிப்பு விழாவின் போது பேசுகையில் கூறினுர்.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சைவப் பெருமக்களும் இளைஞர்களும் இம் மத வளர்ச்சியின் பொருட்டுக் கருமமாற்ற வேண்டும் என்று கூறிய அவர். நாங்கள் பாராமுகமாக இருந்தால் எமது புகழ்பூத்த சைவ மதம் தானகவே அழிந்துவிடும் என்று கூறினுர்.

வலி கிழக்கு காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை, யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. வி. மாணிக்கவாசகர், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, செல்வி. ஜெனற்றாஸ்நிக் உட்பட பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நாவலர் சிலை

## வரவேற்புக்கு ஏற்பாடு

வல்வெட்டித்துறை, திங்கள்

‘‘தமிழ் சைவம்கலாச்சார வாழ்க்கைமுறை ஆகியவற்றை நம்மத்தியில் பரப்பி தமிழையும், சைவத்தையும் கட்டிக்காத்தவர் தான் நாவலர் பெருமான்’ என பருத்தித்துறை பகுதி கிராமமுன்னேற்றச் சங்க அதிகாரிதிரு. தேவசகாயம் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்பாடசாலையில் ஆறுமுகநாவலர் பெருமான்திரு. உருவச்சிலைக்கு வடமராட்சிப் பகுதிமக்களால் கொடுக்கப்பட விருக்கும் வரவேற்பு ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினுர்.

பருத்தித்துறை காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் அட்டவணை நிகழ்ச்சிகள் வகுக்கப்பட்டன. இம் மாதம் 27-ந் திகதி காலை 9 மணிக்கு துன்னுலை யார்க்கரு பிள்ளையார் கோயிலடியில் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனுல் வரவேற்கப்படும். யார்க்கருபிள்ளையார் கோவிலடிவி. செல்லையா, கலிகைச் சந்தி திரு. குலவீரசிங்கம், நெல்லியடி திரு. வல்லிபுரம். வதிரி எஸ். வைத்திலிங்கம், மாலிசந்தி வி. மகேசுவரன், மந்திகைச் சந்தி ஆர். செல்லத்துரை, ஓராங்கட்டை திருமதி காயத்திரி கணேசன், பருத்தித்துறை திரு. என். நடராசா- செல்வி ஆறுமுகம் கல்லூரி அதிபர், வியாபாரி மூலை எம். கந்தப்பு, உடுப்பிட்டி: ஆர். ஆர். தருமரத்தினம், வல்வெட்டித்துறை பண்டிதர் வைத்திலிங்கனுர், தொண்டமானுறு சந்திரி., நல்லதம்பி, செல்வச் சந்நிதி கோவில் க. ஆறுமுகசாமி ஐயர், -திரு. மயில்வாகனம் சாமியார் ஆகியோர் தலைமையில் ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது

அன்று மத்தியானம் செல்வச் சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் மதியபோசனம் அளிக்கப்படும். பின்னர் 2 மணிக்கு சிலை அச்சுவேலிக்கு எடுத்துச்செல்லப்படும்.

ப்பு மகளிர் கல்லூரியினரால் நடத்தப்பட்ட கலை, கைப்பணி விஞ்ஞானப் பொருட்காட்சியை திறந்து வைத்துப் பேசிய வடமாகாண வித்தியாதிபதி திரு தணிகாசலம் குறிப்பிட்டார், விழாவுக்கு கல்லூரி அதிபர்செல்வி எஸ். சரவணமுத்து தலைமை வகித்தார். பண்டிதர் எஸ். நவரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

## வெள்ளி விழா

அளவெட்டி, திங்கள்

வலிகாமம் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ வெள்ளிவிழா இம்மாதம் 14-ம் திகதி உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் நடைபெற இருக்கிறது.

மேற்படி சமாசத் தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நிகழும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு. எஸ். ஜே. வி, செல்வநாயகம் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவது எப்படி? என்னும் தலைப்பில் இடம்பெறும் கருத்தரங்கில் யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை, கூட்டுறவு அபிவிருத்தி முன்னுள் உதவி ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி, அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர்திரு. வி. பொன்னம்பலம், சமாச முன்னுள் செயலாளர் திரு. சி. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வர்.

## நாட்டியநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்.

காரைநகர் மணிவாசகர் சபை நிதிக்காக நடராசர் நினைவு மண்டபத்தில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 14-ம் திகதி டாக்டர் சம்பந்தர் தம்பதிகளின் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இந்திரன் ஆணை கைலைத் தாண்டவம் ஆகிய சில புது நடனங்கள் இந் நிகழ்ச்சியில் இடம் பெறும். (கா. நி)

## தாயகத்தில் திருப்பலி

பண்டத்தரிப்பு, செவ்.

கோலாலம்பூர் மேற்றிராசனத்தில் திருமறைப்பணி புரிந்துவந்த மாதகலைச் சேர்ந்த வண. அடைக்கலசாமி அமலநாதன் தமது தாயகமான மாதகல் பகுதியில் புனித தொம்மையப்பர் ஆலயத்தில் முதல் முறையாக திவ்விய பூசைப் பலியை நிறைவேற்றினுர்.

நதாகக் குறிப்பிட்டார்.

விஞயக விக்கிரகம் பரந்தனிலிருந்து கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபம் வரை ஊர்வலமாக வந்தடைந்தது.

திரு. குக் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இலங்கையில் கிறிஸ்துவ, பௌத்த மதங்கள் வேறுநாட்டிலிருந்தே பரப்பபாதுகாத்து வந்துள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தோனேஜியாவில்இந்துமதம் செழிப்புற்று விளங்கியுள்ளது. அதைப்போலவே உலகெங்கும் இந்து மதம் செழிப்புற்றுவளர ஒவ்வொரு தமிழ் மக்களும்அயராது உழைக்க வேண்டும்.

# மார்க்ஸீய வாதிகள் மீது கவனமாக இருக்கவேண்டும்’

## உதவி சங்கநாயக்க தேரோ

வென்னபுவ, திங்கள்

‘‘நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக நாட்டுமக்களைத் தவருன வழியில் இட்டுச் செல்ல முயற்சியெடுக்கும் மாக்ஸீய வாதிகளதும் அவர்களது ஆதரவாளர்களது நடவடிக்கைகளையும் அரசாங்கம் மிகக் கவனமாகக் கவனிக்க வேண்டும். அதிகாரம் மாக்ஸீயவாதிகளின் கைக்கு மாறினுல் எமது ஜனநாயக உரிமைகள் மட்டுமின்றி அடிப்படைச் சுதந்திரமே பறிபோய் விடும்.

வடமேல் மாகாண உதவி சங்கநாயக்கதேரோ வணநாவில தர்மரத்தின பீதான நாவிலவில் நடைபெற்ற வடமேல் மாகாண சங்க முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தேசிய அபிவிருத்திக்கு அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது. இதனுல் மக்கள் மத்தியில் வேறுசில சிறுபிரச்னைகள் தோன்றியுள்ளன. மக்கள் மத்தியில் நிலவும் இத்தகைய சிறிய பிரச்னைகளை அரசாங்கம் உடனடியாகத் தீர்க்கவேண்டும்.

ஜனநாயக கொள்கைகளை பாதுகாப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுப்பதற்கு மகாசங்கத்திற் குரிமையுண்டு. சர்வாதிகார நாடுகளில் மதங்களுக்கு என்ன நடந்ததென்பது எங்களுக்குத் தெரியும். ஜனநாயக நாட்டில் பௌத்தம் மாத்திரமே சிறந்தமதமாகும்.’’

## எல்லாம் உயர்கிறது

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவில் சாமான்களின் விலை உச்சக் கட்டத்தில் ஏறிவிட்டது. பம்பாய் வெங்காயம் தட்டுப்பாடிருப்பதால் ருத்தல் ஒன்று ஐம்பது சதத்திற்குமேல் விற்பனையாகிறது. மரக்கறி விலையும் உயர்ந்துள்ளதாம்.

## கலைவிழா

நெடுங்கேணி, திங்.

நெடுங்கேணி முத்தமிழ்க் கலாமன்றத்தின் கலைவிழா எதிர்வரும் ஜுலை மாத முதல் வாரத்தில் நெடுங்கேணி செந்தில் அரங்கில் நடைபெறும். மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விழாவில் ஒரு நாள் விவசாய நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவ்விழாவில் வவுனியா வடக்குப் பகுதி விவசாய மன்னர்கள் கௌரவிக்கப்படவிருக்கிறுர்கள்.

நெடுங்கேணிப்பிரிவுக் காரியாதிகாரி திரு. ஜெ. செந்தில்நாதன் தலைவராகவும், திரு த. ம. பீ. பொன்கலன்ட் செயலாளராகவும், திரு. என். வேல்தாஸ் பொருளாளராகவும் கொண்ட கலைவிழாக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இ. போ. ச. ஊழியர்

## ஒருகோரிக்கை நிறைவேறியது

அளவெட்டி, திங்கள்

இதுவரைகாலமும் மாலையில் வழங்கப்பட்டுவந்த இ.போ.ச, ஊழியரின் சம்பளம் நேற்றுக்காலையில் வழங்கப்பட்டது.

இ.போ.ச. ஊழியர் சங்கங்கள் 19 அம்ச கோரிக்கைகள் சம்பந்தமாக மேலதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்ற இச் சமயத்தில் சம்பளம் காலையில் வழங்கப்படவேண்டுமென்ற ஒரு கோரிக்கை நிறைவேற்றி விட்டதாக தொழிற்சங்க பிரமுகர் ஒருவர் கூறுகிறுர்.

## நியமனம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மிருக வைத்தியராக செல்வி பி. மாணிக்கம் கடமையேற்றுள்ளார். மிருக வைத்தியரின் இடம் 1966-ம் ஆண்டுமுதல் காலியாகவிருந்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

குறைபாடுகள் எனக்கு அதைரியத்தை உண்டாக்காது; அதற்குப் பதிலாக அவை என்னைப் பரிசுத்தப் படுத்தும்.

—மகாத்மாகாந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம். சௌமியவருஷம் வைகாசி மாதம் 28 ந்திகதி (10-6 69)


## இ.போ.ச. சேவை

'சுகததாசாதிட்டம்'என புதிய திட்டம் ஒன்றை கொழும்பு நகரின் சில பகுதிகளில் பஸ் போக்குவரத்துச் சேவையில் பரீட்சார்த்தமாகஏற்படுத்திய தேசியமய சேவைகள் அமைச்சர் திரு.வி. ஏ. சுகததாசா, தமது திட்டம் சரியாகச் செயல்படுகிறதாவென்பதை பஸ் தரிப்பு நிலையங்கள் சிலவற்றில் வியர்க்க விறுவிறுக்க நின்று அனுபவித்த பின் 'இலங்கைப் போக்குவரத்துச்சபையில் சதி' நடக்கிறது என்று கண்டுபிடித்துத் தெரிவித்தார். இதை, லங்கா சமசமாஜக்கட்சியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அகில இலங்கை ஐக்கியமோட்டார்தொழிலாளர் யூனியன் பொதுக் காரியதரிசி திரு டி ஜி.வில்லியம் மறுத்திருப்பதுடன், இ. போ சபையின் சகல கேடுகளுக்கும் இ போ.சபை நிர்வாகமே காரணம் என்றுகூறியிருக்கிறார். இ.போ.சபைக்குள் 'சதி' இருப்பதையோ,நிர்வாகத்தில் சீர்கேடு இருப்பதையோ இ போ.சபைத் தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதிக பஸ்களும், அதிக டிப்போக்களும் தேவையென்றும் சபைத்தலைவர் சொல்லுகிறார். என்றாலும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் பஸ் பிரயாணிகளுக்குத் திருப்தி தரக்கூடிய முறையில் யாவும் சீர்செய்யப்பட்டுவிடுமென்றும் சபைத்தலைவர் ஏ. ஆர். பி. விஜயசேகரா நம்பிக்கையுடன் தெரிவித்திருக்கிறார். 'சதி' பற்றிக் கூறியபோதிலும் இன்னும் ஆயிரம் பஸ்கள் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று அமைச்சர் திரு.வி ஏ. சுகததாசா சொல்லியிருக்கிறார்.

இ போ. சபையில் 'சதி' இருக்கிறதென்று அமைச்சர் கூறுவதில் உண்மையிருக்குமானால் அவர் அமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்னர் நியமிக்கப்பட்டவர்களா, அமைச்சரான பின்னர் நியமிக்கப்பட்டவர்களா சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியதும் எடுக்கவேண்டியதும் அமைச்சரின்கடமை. அதை அவர் செய்யத் தவறியிருந்தால், வீணாக 'சதி' பற்றிப் பேசிவிசுவாசமுள்ளஊழியர்களின் மனதையும் புண்படுத்தி அனைவரினதும் எதிர்ப்பையும் தேடிக்கொள்ளக் கூடாது.

'சதி'பற்றி அமைச்சர் பேசுவதும் 'சதி' யில்லையென்று மறுத்து இ.போ.ச நிர்வாகம்தான் சகல கேடுகளுக்கும் காரணமென்றும் தொழிலாளர் யூனியன் எதிர்க் குற்றஞ் சாட்டுவதும் பஸ்பிரயாணிகளுக்கோ, பொதுமக்களுக்கோ எவ்வித நன்மையும் செய்யாது. பிரயாணிகளின் நலனுக்கு என்ன செய்யமுடியுமோ அதைச் செய்வதற்கு தொழிலாளரும் நிர்வாகமும் ஒத்துழைத்துச் செய்யவேண்டும். இதைத்தான் பஸ்ஸுக்காகப்பலமணி நேரம் தவம் கிடக்கும் பிரயாணிகள் எதிர்பார்க்கிறார்கள்.

## பேரிழப்பு

பொறுப்புமிக்க உள்நாட்டமைச்சர் பதவி வகித்த போதும் அரசாங்க சேவைக் கமிஷனில் அங்கத்துவம் வகித்தபோதும் தேசிய ஐக்கியத்திலும் தமிழ் மக்களின் நலனிலும் அதிக நம்பிக்கை வைத்து அடக்கமாகப் பல நல்ல சேவைகளைச் செய்த சேர் அருணசலம் மகாதிஞராகவும் சிறந்த அமைச்சராகவும் சிறந்த பண்பும் அடக்கமும் அமைதியும் நிறைந்தவராகவும் விளங்கினார்.

1947-ம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்ததும் 'எனது தோல்வியைப்பற்றி நான் கவலைப்படவில்லை; தமிழ் மக்களின் எதிர் காலத்தை எண்ணித்தான் கவலைப்

# சர்வகட்சியும் வட்டமேசையும் பயன்தருமா?

(இக்கட்டுரை 'ஈழநாடு' (7-6-66) வாரமலரில் சில பதிப்புகளில் வெளிவந்திருந்தது)

சர்வகட்சி மகாநாடு கூட்டுவதாலோ, வட்ட மேசை மகாநாடு கூட்டுவதாலோ பயன் கிடைக்குமா?

மொழிப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுகாணவேண்டுமானால் சகல அரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளக் கூடிய ஒரு வட்ட மேசை மகாநாடு கூட்டப்படவேண்டுமென்றும் இதில் ஒரு முடிவுசெய்துகொள்ளப் பட்டால் பின்னர் இந்த மொழிப் பிரச்னையை கட்சி அரசியலுக்காகவும் ஆட்சி அதிகாரப்போட்டிக்காகவும் யாரும் பயன்படுத்த முன்வரமாட்டார்களென்று 1956-ம் ஆண்டிலிருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறி வந்திருக்கிறார். அந்தச் சமயத்திலேயோ அல்லது அதற்குப்பின்னரோ அல்லது இன்றுகூட மொழிப்பிரச்னை உட்பட தேசீயப் பிரச்னைகள் அனைத்துக்கும் ஒரு நல்ல தீர்வுகாண வேண்டுமென்றும் நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட வேண்டுமென்றும் ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கும் ஆட்சிபீடத்துக்குவரும் வாய்ப்புள்ளவர்களுக்கும் அக்கறை இருக்குமானால் வட்டமேசை மகாநாடு கூட்டப்பட்டிருக்கலாம் இதே சமயம் எதையும் சாதிக்கும் திறமை படைத்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே முயற்சி செய்து 1956-ம் வருடத்திலிருந்து 1969-ம் வருடம் வரையும்உள்ள இத்தனை ஆண்டுகளுக்குள் எப்படியோ, எவரைக் கொண்டோ, வட்ட மேஜை மகாநாட்டைக் கூட்டியிருக்கமுடியும். 'பூனைக்கு மணிகட்டுவது யார்?' என்ற நிலையில் வட்ட மேஜை மகாநாடு என அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதால் வட்ட மேஜை மகாநாடு என்ற வார்த்தைக்கே மதிப்பில்லாத ஒருநிலையை வேறுசிலர் சந்தர்ப்பம் பார்த்து ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. 'ஒரேமொழி, ஒரே இனம் தான் எங்கள் கொள்கை' என்ற ரீதியில் பேசியும் செயலிலும் காட்டமுனைந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா சில வருடங்களுக்குமுன்னர் ஆட்சிமன்றத்தில் ஒரு கட்டத்தில் சாங்கமும் பணியவேண்டியேற்பட்டது.

இதைத்தொடர்ந்து இரு பெரும் தமிழ்க்கட்சிகளும், தமிழ்மக்களைப்பாதிக்கின்ற, எஞ்சியுள்ள உரிமைகளையும் பறித்துவிடக்கூடிய, சட்டங்களையும் அரசாங்கத்தின் செயல்களையும் தடுத்து நிறுத்துவதற்குஒரு பொதுத் திட்டத்தை வகுத்துச்செயல்பட முன்வந்திருந்தால் ஓரளவாவது பயன்கிடைத்திருக்கும்.

வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளின் போதனாமொழியை மாற்றுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து, இந்த ஆபத்தைத்தடுப்பது பற்றியும் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றியும் ஆராய்வதற்குசென்றமாதம் 31-ந் திகதிதமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளரும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஒருமகாநாடுகூட்டினார். வடபகுதியைச்சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் உள்ளூராட்சிமன்றத்தலைவர்கள், கல்விமான்கள் ஆகியவர்களுக்கு அவர் அழைப்பு அனுப்பியிருந்தார். எட்மண்ட்சமரக்கொடி தலைமையிலுள்ள புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக்கிளையைச்சேர்ந்தவர் தவிர வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளோ தலைவர்களோ கலந்துகொள்ளவில்லை. ஏன்?

தமிழ்மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு பெரிய கட்சி என்ற முறையில் பல கட்சிகளையும், நிறுவனங்களையும் அழைத்துப் பேசுவதற்குத் தமிழரசுக் கட்சிக்கு அருகதையுண்டுதானென்றாலும் பல்வேறுகட்சிகளையும் நிறுவனங்களையும் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படும்பொழுது கடைசி நேரத்தில்தானா இப்படியொரு மகாநாட்டைக் கூட்டவேண்டும்? சென்ற பொதுத்தேர்தல் முடிந்தவுடன் அல்லது அதற்கு முந்தியபொதுத்தேர்தல்முடிந்தவுடன் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களுக்கு விடிவுகாணசகலகட்சிகளையும் பொது நிறுவனங்களையும், கல்விமான்களையும் அழைத்து ஆலோசனை செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

### அங்கேயும் பிரச்னை இருந்தது

பல்வேறு கட்சிகளையும் வேறுபட்ட கருத்தை உடையவர்களையும் ஒரு மகாநாட்டுக்கு அழைப்பதற்குமுன் அவர்களுடைய ஆலோசனைகளையும் முதலில் கேட்டு அவர்களின் சம்மதத்தையும் பெற்றிருக்கலாம். வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்காக இப்பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் பாரிசில் கூடிப்பேச எடுத்துக்கொண்ட முயற்சியில் முதல் மூன்று நான்கு மாதங்கள் மகாநாட்டு மேசை எப்படியிருக்கவேண்டும்; வட்டமாகவா, சதுரமாகவா. நீள்சதுரமாகவா, யார் யார், எங்கே இருப்பது போன்ற பிரச்னையிலேயே கழிந்ததென்பதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

### அரசியல் நிருபர்

ஆனாலும் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பெரிய நெருக்கடியைத்தீர்ப்பதற்கு யார் மகாநாடு கூட்டினாலும் அதில் உண்மையான ஆர்வமும்அக்கறையுள்ளவர்களும் கலந்து கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வருகிறது; பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. பயன்படுத்திக் கொள்வார்களா?

தமிழ்மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து தங்கள் குறைகளை நீக்க வழியென்ன என்பதை ஆராய்ந்து ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டால் பெரும்பான்மைக் கட்சிகளையும் சேர்த்து பிரதமரைக்கொண்டே ஒரு மகாநாட்டைக்கூட்டி தேசியப் பிரச்னைகளுக்குத் தசிய ரீதியில் ஒரு தீர்வு காண்பதற்கு முயற்சி செய்வது கடினமாக இராது. தேசியப் பிரச்னைகளுக்குத் தேசியரீதியில் தீர்வுகாண சகலகட்சிகளையும் கொண்ட வட்ட மேஜை மகாநாடு கூட்டலாமென ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்ததாகவும் எனக்கு நினைவு.

வள்ளுவர்விழா

### பேச்சுக்கட்டுரை போட்டி முடிவுகள்

கோப்பாய், திங்கள்

இருபாலை மத்திய சன சமூக நிலையத்தாரால்நடாத்தப்பட்ட வள்ளுவர் விழாப் பேச்சுக் கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

பேச்சுப் போட்டி- கீழ்ப் பிரிவு: கே. விநாயகதேவி, எஸ். செந்தூர்செல்வி, எஸ். சபேசன், எஸ். ரஞ்சினி, எம். ராஜேஸ்வரி.

மேற்பிரிவு: கே. ராசதுரை, ஜே. ஞானப்பிரகாசம், முத்துக்குமார ராஜேஸ்வரன் , வி. பரமலிங்கம், ரி. ஜெகதீஸ்வரன்.

மனனப் போட்டி- கீழ்ப் பிரிவு: எஸ். சபேசன், கே. விநாயகதேவி, கே. ஜெயச்சந்திரன்.

எழுத்துப் போட்டி- ரி. ஜெகதீசன், வி. பரமலிங்கம். கே. தவராஜன்

கட்டுரைப் போட்டி- ரி. ஜெகதீசன், ஆர். ராசதுரை, பி. மனோன்மணிதேவி, முத்துக்குமாரராஜேஸ்வரன், கே. விநாயகதேவி.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

### சுட்டதாக வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

பொலிஸ் கான்ஸ்டபிளைச் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்தாரென்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவிருக்கின்றனராம்.

கள்ளக் கடத்தல் பொருட்களுடன் வந்த லொறியை துன்னாலைக் கருகில் வைத்து தடுத்து நிறுத்த முயன்ற வல்வெட்டித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிளான சந்திரத்தினவைத் துப்பாக்கியால் சுட்டதாக குறிப்பிட்ட நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறிப்பிட்ட லொறி மரத்துடன் மோதியதால் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்

# ஒளிமயமான எதிர்காலம்?

கிளிநொச்சி, இராமநாதபுரத்திலுள்ள கு. வ. செபஸ்தியாம்பிள்ளை என்ற அன்பர் ஒரு கனவு கண்டாராம். அந்தக் கனவை அப்படியே எமக்கு எழுதித் தந்திருக்கிறார். ஈழத்து மக்கள் எல்லோரும் சாதி சமயம் என்ற வேறுபாடுகளின்றி சுகமாக சுபீட்சமாக வாழ்வதற்கு இந்தக் கனவு நனவானால் கட்டாயம் வழி பிறக்கும் என்று அவர் கூறுகிறார்.

அரசியல் கட்சிகள் என்று இல்லாமல் பின்வரும் தலைவர்கள் சேர்ந்து ஓர் ஐக்கிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதே அவருடைய கனவு.

டட்லி சேனநாயக்கா (தேசாதிபதி), ஜே. ஆர் ஜெயவர்த்தன (பிரதமர்), எஸ். டி. பண்டாரநாயக்கா (ராஜாங்க மந்திரி), சி. பி. டி. சில்வா (உணவு, விவசாயம்), தஹநாயக்கா (கல்வி, விளையாட்டு), சுகததாஸா (கைத்தொழில, மீன்பிடி), எம். டி. பண்டா (போக்குவரத்து), பிரேமதாஸா (ஸ்தலஸ்தாபனம்), அபயகுணவர்த்தன (திட்டம், ஒலிபரப்பு), ஈ. எல். சேனநாயக்கா (வர்த்தகம்), பிலிப் குணவர்த்தன (கூட்டுத்தாபனங்கள்), டாக்டர் குணசேகரா (சுகாதாரம்), செ. சுந்தரலிங்கம் (உள்நாட்டு அமைச்சு), என். சண்முகதாசன் (தொழில்), ஏ. சிவசுந்தரம் (காணி, நீர்ப்பாசனம்), வி. நவரத்தினம் (சட்டம், கலாசாரம்), எம். முகமது (மதம், உல்லாசப் பிரயாணம்), சி. எஸ். ஹமீது (தந்தி தொடர்பு), தொண்டமான் (தோட்டம், சிறுபயிர்).

அன்பர் செபஸ்தியாம்பிள்ளையைப் போல இன்னும் பல தமிழ் அன்பர்கள் கனவு கண்ட வண்ணமாகவே இருக்கின்றனர். ஈழநாட்டுத் தமிழர் இன்று இருக்கும் நிலையில் கனவு காணாமல் வேறு என்ன செய்ய முடியும்?

மேற்கண்ட பட்டியலில் பல பிரமுகர்கள் சேர்க்கப்படவில்லை. சில புதுப் பிரமுகர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அடியேன் பொறுப்பில்லை. இந்தக் கடிதத்தைப் பிரசுரிக்க வேண்டிய முக்கியமான காரணம் ஈழத் தமிழரின் இன்றைய நிலையை சுட்டிக் காட்ட வேண்டும் என்பதே.

அடுத்த வருடம் இந்த நாட்களில் பொதுத்தேர்தல் எதிர்பார்க்கலாம். எங்கள் மதிப்புக்குரிய அரசியல் தலைவர்கள், சிங்களவரும் சரி தமிழரும் சரி தேர்தலில் எப்படியெல்லாம் கம்பக் கூத்தாடி வெற்றி பெறலாம் என்ற சூதாட்டத்தில் இறங்கிவிட்டார்கள். மதம், மொழி, இனம், சாதி எல்லாம் பந்திக்கு இழுக்கப்படுகின்றன.

இந்தச் சமயத்தில் தமிழ் பொதுமக்கள் என்னசெய்யலாம், எங்கே போகலாம், யாரை ஆதரிக்கலாம், யாரை ஒழிக்கலாம் என்று தவிப்பது சகஜம். தமிழ் சமுதாயம் விரும்பிய காரியங்கள் பெரும்பாலும் நிறைவேறாமலே இருக்கின்றன. மொழி சமஅந்தஸ்து இன்னும் இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறது. பல்கலைக்கழகங்களும் ஒலிபரப்பு நிலையங்களும் கானல் நீராய்ப் போய்விட்டன. போதாக் குறைக்கு மேனாட்டு வெள்ளையர் செய்தது போன்ற மதமாற்றமும் நடக்கிறது.

### நாட்டிலும் நகரிலு

தமிழருக்கு எப்பொழுதுமே இப்படியான அவல நிலை இருக்க வேண்டுமா? அவர்களுக்கு எப்பொழுது தான் விமோசனம் ஏற்படப் போகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசியல் விஷயங்களை கூர்ந்து கவனித்துவரும் தமிழ் இளைஞர்கள் முன்னேற்றமான முறையில் புதிய அரசியல் கட்சிகளை உருவாக்க முயலுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

பழையன கழிதல் வேண்டும். புதியன புகுதல் வேண்டும். இது இயற்கையின் தடுக்க முடியாத நியதி. மக்களின் மனப்பான்மையை அறிந்து அவர்களுக்கு ஏற்ற முறையில் நடக்க வேண்டும் என்பதை அரசியல் தலைவர்கள் எல்லோரும் அறிவார்கள்.

வாக்குரிமைபெற்ற தமிழ் இளைஞர்கள், தமிழரின் வருங்காலத்தில் அக்கறை கொண்ட வாலிபர்கள் பல விஷயங்களையும் ஆய்ந்தோய்ந்து பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். தமிழரின் உரிமைகளை இனிமேலும் பறிமுதல் போகவிடப்படாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வகித்த போதும் அர சாங்க சேவைக் கமிஷ னில் அங்கத்துவம் வகித்தபோதும் தேசிய ஐக்கியத்திலும் தமிழ் மக் களின் நலனிலும் அதிக நம்பிக்கை வைத்து அடக்கமாகப் பல நல்ல சேவைகளைச் செய்த சேர் அருணாசலம் மகா தேவா மறைந்தார் என்ற செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட் டின் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட வேண்டுமென உண்மையிலேயே விரும் பும் அனைவருக்கும் நெஞ்சு துணுக்குறச் செய்யும்.

சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் புதல்வரான சேர் அருணாசலம் மகா தேவா சிறந்த கல்விமா னாகவும் சிறந்த வழக்க றிஞராகவும் பண்பும் அடக்கமும் அமைதியும் நிறைந்தவ ராகவும் விளங்கினார்.

1947-ம் ஆண்டு தேர் தலில் தோல்வியடைந்த தும் 'எனது தோல்வி யைப்பற்றி நான் கவலைப் படவில்லை; தமிழ் மக்க ளின் எதிர் காலத்தை எண்ணித்தான் கவலைப் படுகிறேன்' என்றுசொன் னது அவரது தீர்க்க தரி சனம் என்றுதான் இன் றைய நிலையைப் பார்க் கும்போது எண்ணத் தோன்றுகிறது.

உண்மையான தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கை கொண்டிருந்த சேர் அரு ணாசலம் மகாதேவாவின் மறைவு பேச்சளவில் மட் டும் ஐக்கியம் நிலவும் இன்றைய நமது நாட் டுக்கு பேரிழப்பு என்றே சொல்லவேண்டும்.

## கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் இன்று கொடியேற்றம்

# கற்பக விநாயகனார் அற்புதமாய் அருள்வார்

**வெண்பா**

ஏரோங்கும் ஈழத் தெழில் யாழ்ப்பாணத் தொளிரும்
வாரோங்குங் கோவைதெற்கில் வாழ்வுகொளும்—
சீரோங்கும்
கற்பகவி நாயகனார் கைதொழுது வேண்டுவர்க்கு
அற்புதமாய் நின்றருள்வார் அண்டு.

**விருத்தம்**

துங்கமுள தூயவடி யார்கள் நிதம் நின்று
துதிபாட வருள்செய்த சுகுணகுண சோதி
சங்கமுயர் கூடலெனும் பதியதனில் அன்று
சகலதிரு விளையாடல் பலசெய்த ஈசன்
பங்கிலுறை பார்வதிப யந்தவொரு பாலன்
பாங்கான ஆனைமுக பரிசுத்த சீலன்
தெங்குவளர் தென்கோவை தூயபதி மேவும்
தேசுவளர் கற்பகவி நாயகனே அருள்வாய்!

**வேறு**

மன்னிய வளம்பல மலிந்த யாழ்நகர்
துன்னிய கோவையிற் தென்றிசை மேவியே
மின்னிய கற்பக விநாயக னடிதொழ
உன்னிய யாவுமே யொன்றெனச் சேருமே!

--கவிஞர் முருக சூரியன்.

## பொங்கல்

முல்லைத்தீவு, திங்கள்

வற்றாப்பளை அம்மன் பொங்கல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஏறக்குறைய பதினையாயிரம் பக்தர்கள் வரை வந்திருந்தனர். பொலிசாரினதும் தொண் டர் படையினரதும்சேவைக ளால் இம்முறைகளவுகள் எது வும் நடைபெறவில்லையாம்.

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு மகாவித்தியா லயமாணவர்களால் சம்பந் தர் குருபூசை கொண்டா டப்பட்டது. பிரதிநிதி அதி தியாகக் கலந்துகொண்ட தீவுப்பகுதி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. சு. நல லையா ஞானசம்பந்தர் பேச் சுப் போட்டியில வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்கினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக் கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

த்து ஏற்படுத்திக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. 'ஒரேமொழி, ஒரே இனம் தான் எங்கள் கொள்கை' என்ற ரீதியில் பேசியும் செய லிலும் காட்டமுனைந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண் டாரநாயகா சில வருடங்க ளுக்குமுன்னர் ஆட்சிமன் றத்தில் ஒரு கட்டத்தில் ''ஒரே மொழி, ஒரே இனம்'' என்றகருத்தில் பேசியபோது உங்களையும் சேர்த்து இப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில் கூட இப் போது ஐயம்கொள்ளவேண் டியதாக இருக்கிறது என்ற கருத்தில் திரு. ஜி. ஜி. பொன் னம்பலம் கூறியதாக என க்கு ஞாபகம். ஆனாலும் வட்டமேஜை மகாநாட்டின் மூலம் மொழி மற்றும் தேசி யப்பிரச்னைகளுக்கு ஒருநல்ல தீர்வுகாண முடியுமென்ற நம்பிக்கையை திரு. ஜி. ஜி. இன்னும் இழக்கவில்லை. அது வீண்போகாதென்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருக்கின்றன.

## தட்டிக்கழித்து வந்தனர்

'வட்ட மேஜை' என்றால் என்ன சதுர மேசை என்றால் என்ன; யாருடன் கூடிப்பேசு வது, எதைப்பற்றிப் பேசு வது, ஒவ்வொரு போக்கை யுடையவர்களுடன் மகா நாடு நடத்துவதினால் என்ன பயன் கிடைத்துவிடப்போகி றது என்று தமிழரசுக்கட்சி யைச் சேர்ந்த பலரும் மற் றும் சிலரும் 'வட்டமேஜை மகாநாட்டு'யோசனையையே தட்டிக்கழித்து வந்தனர். தலைவர்கள்ஒற்றுமையென்ற பேச்சுக்கே அவசியமில்லை யென்றும் மக்கள் ஒன்றுபட் டால் போதுமென்றும் அதா வது மக்கள் ஒரே கட்சி யையே, ஒரே தலைமையையே அவர்கள் தெரிவுசெய்தால் அதுவே உண்மையான ஒற் றுமையாக இருக்குமென் றும் தமிழரசுக்கட்சியினர் தெரிவித்துவந்தனர். வடக்கு கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரையில் இது வரை இரண்டு தமிழ்க்கட் சிகளினதும் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளினதும் சேவையும் ஆற்றலும் தேவையென்ப தையே தெரிவித்துவந்துள் ளனர். சென்ற பத்து ஆண்டு களுக்குமேலாக இலங்கை வாழ் தமிழ்மக்கள் பலவித கஷ்டநஷ்டங்களுக்குள்ளாகி படிப்படியாக சகல உரிமை களையும் இழந்துவருகின்ற னர்.

போதனாமொழிப்பிரச்னை, கல்வி வெள்ளையறிக்கையில் தலைதூக்கியபோது அரசாங் கக்கட்சியில் அங்கம் வகித்த இருபெரும் தமிழ்க்கட்சிக ளும் ஒன்றுசேர்ந்து ஒரே குரலில் வாதாடியதால் கல்வி அமைச்சரும் விட்டுக் கொடுக்க நேர்ந்தது; அர

கூட்டவேண்டும்? சென்ற பொதுத்தேர்தல் முடிந்த வுடன் அல்லது அதற்கு முந் திய பொதுத்தேர்தல்முடிந்த வுடன் தமிழ்மக்களை எதிர் நோக்கியுள்ள கஷ்டங் களுக்கு விடிவுகாணசகலகட் சிகளையும் பொதுநிறுவனங் களையும், கல்விமான்களையும்

கடினமாக இராது. தேசியப் பிரச்னைகளுக்குத் தேசியரீதி யில் தீர்வுகாண சகலகட்சி களையும் கொண்ட வட்ட மேஜை மகாநாடு கூட்டலா மென ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாப னத்தில் தெரிவித்திருந்தா கவும் எனக்கு நினைவு.

# யாழ்ப்பாணத்தில் இசைக்கலை; சித்தூரார் அபிப்பிராயம்

உரும்பராய், திங்கள்

''நமது இசைக்கலை தெய் வத்தன்மை பொருந்தியது. அதன் சிறப்பை சொல்லி விட முடியாது. சிலர் திருப் புகழ் முதலிய தெய்வப் பாடல்களுக்கு அர்த்தம் கூறும்படி கேட்கிறார்கள். தெய்வத்தன்மை பொருந் திய அப்பாடல்களுக்கு அர்த் தம் கூறவே முடியாது. தெய்வப் பாடல்களைப் பாடப்பாட பரமானந்தம் உண்டாகும். இதை எனது அனுபவத்திலேயே கண்டி ருக்கிறேன். என்னைப்போல எனது மாணவர்களும் ஈழத் தின் பல பகுதிகளிலும் இசைக்கலையைப் பரப்பி வருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இசைக்கலையில் யாழ்ப் பாணம் பெரிதும் ஆர்வம் காட்டி வருவது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக் கிறது.''

அண்ணாமலை பல்கலைக் கழக இசைத்துறைப் பகுதி யின் முன்னாள் பேராசிரியர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளைக்கு உரும்பராய் சங்கீத ரசிகர் கள் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசு கையில் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

உருபராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் திரு. சு. குமாரசேகரம் தலைமை யில் நடைபெற்ற இவ்வர வேற்பின்போது திரு. க. த. வேலுப்பிள்ளை சித்தூர் சுப்பிரமணியபிள்ளைக்கு மலர்மாலை சூட்டி வரவேற் றார்.

''இராமநாதன் இசைக் கல்லூரி நிறுவ சேர் பொன் இராமநாதன் பல்லாண்டு களுக்கு முன்னரேயே பெரி தும் விரும்பினார். அவ ருடைய கனவு இப்போது நனவாகிக்கொண்டு வரு கிறது. இராமநாதனின் பழைய உள்ளக் கிளர்ச் சியே சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இன்று இராமநாதன் இசைக்கல்லூரி சார்பில் ஈழம் வரக் காரணமாயிற்று என்று வரவேற்றுப் பேசிய பண்டிதமணி நூல் வெளி யீட்டுக் காரியதரிசி ஆசிரி யர் திரு. க. பஞ்சாட்சரம் கூறினார்.

சைவத்தமிழ் வித்தியா லய அதிபர் திரு. சு. குமார சேகரம் தனது தலைமை யுரையின்போது, இராம நாத வள்ளலின் நோக் கத்தை நிறைவேற்றுமுக மாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இராம நாதன் இசைக்கல்லூரி வளர்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஈடுபட வந்தி ருக்கும் இசைவள்ளல் சித் தூர் சுப்பிரமணியபிள்ளை வரவு எமக்கெல்லாம் மட் டற்ற மகிழ்ச்சியைத் தரு கிறது'' என்றார்.

திரு. வ. நடேசலிங்கம் ஜே. பி. பேசுகையில், தமிழ் மக்களாகிய எமது வளர்ச்சி எங்கள் கலை வளர்ச்சி யிலேயே பெரிதும் தங்கி யுள்ளது. கலைகளுக்குள்ளே உயர்ந்த கலை சங்கீதக் கலை. சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை உரும் பராய்ப்பகுதிக்குச் சமுகம் கொடுத்ததையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடை கின்றோம். சித்தூராரது வருகை ஈழத்துக்கும் தமி ழகத்துக்கும் சிறந்த ஒரு கலைப்பாலம் என்றார்.

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையின் சிஷ்யன் சங்கீத பூஷணம் மட்டக்களப்பு என். இராசு உட்படப் பல மாணவர்கள் இசைவிருந் தளித்தனர். உரும்பராய்பட் டணசபைத் தலைவர் திரு. க. பத்மராசா நன்றி கூறி னார்.

## குருபூசை

அளவெட்டி, திங்கள்

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை வித் தியாலய அதிபர் திரு. வ. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

## மஹோற்சவம்

கோப்பாய், திங்கள்

கோப்பாய் தெற்கு கற் பகப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10ம் திகதி துவஜாரோஹணத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

23ம் திகதி இரதோற்சவ மும் 24ம் திகதி தீர்த்தோற் சவமும் நடைபெறவிருக் கிறது.

சந்திரத்தினைத் துப்பாக் கியால் சுட்டதாக குறிப் பிட்ட நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள் ளது.

குறிப்பிட்ட லொறி மரத் துடன் மோதியதால் காய மடைந்த இருவரும் யாழ்ப் பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

சுங்கப் பகுதி உதவி கலெக்டர் திரு. செனரத் னவும், காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரின் டனும் விசாரணை நடத்தி வருகின்றனர். (கா. நி)

## பௌத்தர்கள் கிறிஸ்தவமதத்தை நாடுகிறார்கள்

கொலனுவ, திங்கள்

''மகாசங்கத்திலுள்ள பௌத்த பிக்குகளில் 30 வீதத்தினர் நல்ல உணவின் றி கஷ்டப்படுவதுடன் 50 வீதத்தினர் வேறு பலநோய் களால் பீடிக்கப்பட்டுள்ள னர். இவர்களைக் கவனிக்க வேண்டியது பௌத்த மக்க ளின் பிரதான கடமை யாகும்.''

மருதானை ஸ்ரீலங்கா வித் தியாசாலை அதிபர் வண பத் தேகம விமலவன்ஸதேரோ ஹோததுவ பிக்குகள் சிகிச்சை நிலையத்தில் நடை பெற்ற ஹோததுவ பிக்கு கள் சபையின் 16வது வருடாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகை யில், ''பௌத்தமக்கள் பிக்கு கள் அனுபவிக்கும் கஷ்டங் களை உணர்வதில்லை பிக்குக ளின் கஷ்டங்களுக்குத் தீர்வு காண அவர்கள் முயலவேண் டும் பௌத்தர்களின்பொரு ளாதாரச் சீர்கேட்டுக்கு பௌத்தர்கள் அல்லாதவர் கள் தான் காரணம் அவர் கள் தங்கள் சமயவளர்சியின் போக்கோடு அனாதைப் பிள் ளைகள் பராமரிப்பு போன்ற நிலையங்களை நிறுவியுள்ளனர் இதனால்பௌத்தர்கள்கிறிஸ் தவ சமுதாயத்தை நாடுகிறா ர்கள். இந்த பிக்கு சிகிச்சை நிலையம் பிக்குகளுக்குச் சிற ந்த சேவை செய்கிறது. இதற்கு பொதுமக்கள்உதவி யளிக்க வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

முகர்கள் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். அதற்கு அடி யேன் பொறுப்பில்லை. இந் தக் கடிதத்தைப் பிரசுரிக்க வேண்டிய முக்கியமான காரணம் ஈழத் தமிழரின் இன்றைய நிலையை சுட்டிக் காட்ட வேண்டும் என்பதே.

அடுத்த வருடம் இந்த நாட்களில் பொதுத்தேர்தல் நடந்து முடிந்துவிடும் என்று வாக்குரிமைபெற்ற தமிழ் இளைஞர்கள், தமிழரின் வருங்காலத்தில் அக்கறை கொண்ட வாலிபர்கள் பல விஷயங்களையும் ஆய்ந் தோய்ந்து பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண் டும். தமிழரின் உரிமைகளை இனிமேலும் பறிமுதல் போகவிடப்படாது.

— வழிப்போக்கன்

# 'கலைஞர்களுக்கு இங்கு பஞ்சமில்லை ஊக்குவிப்பவர்கள் தான் குறைவு'

வெள்ளவத்தை, திங்கள்

இந்த நாட்டிலே கலைஞர் களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் அவர்களை ஆத ரித்து ஊக்கப்படுத்துகிற வர்கள்தான் குறைவு. குறை சொல்ல ஆயிரம் பேர் இருப்பார்கள். நிறை சொல்லி உற்சாகப்படுத்த யாருமே துணிவதில்லை. சங்க காலத்திலும் சரி அதற்கு முன்பும் சரி இலங் கையிலேதான் கலை வளர்ந் தது. தென்னவன் இராவ ணன் கூட யாழிசையிலே வல்லவன். நாரதமுனிவற் கேற்பச் சாமகீதம் பாடிய வேந்தன் அவன். அவனது பரம்பரையினர் நாங்கள்.

இன்று திருகோணமலை யில் இருந்து வந்து எமக் குக் கலைவிருந்தளிக்கும் கலை ஞர்களை நான் பாராட்டு கின்ற இதே வேளையில் இவர்கள் மலைநாடு, யாழ்ப் பாணத்திலே அடக்கப் பட்ட ஒடுக்கப்பட்ட உரி மைகள் குறைந்த மக்கள் வாழுகின்ற பிரதேசங்க ளிலேயெல்லாம் சென்று தமது இசைமழையால் அங்கு வாழும் மக்களுக் குப் புத்துயிரும் புது உற் சாகமும் அளிக்க வேண்டும் என்று அன்புடன் வேண்டு கிறேன்-

இவ்வாறு கவிஞர் சக்தீ அ. பாலையா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற திருக்கோண மலை ஜெயா புரொடக்ஷன் ஸாரின் 'இசைத்தென்றல்' நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறி னார்.

அவர் மேலும் பேசுகை யில் கூறியதாவது:-

அரசியல் வாதிகளால் சாதிக்க முடியாதவற்றை நல்ல எழுத்தாளர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் சாதித்து விடமுடியும் எமது அமிழ்தினுமினிய அருமைத் தமிழ்மொழியை எவரும் மறந்து விட தீர் கள். பாரம்பரியமாகப் புகழ்பெற்ற எமது வீரப் பரம்பரையை விடுத்து வேறு இனத்திற்கு எவரும் மாறாதீர்கள் இனம் மாறுவ தால் நீங்கள் அடையப் போவது எதுவுமே இல்லை இந்நாட்டில் வாழும் அடக் கப்பட்ட மக்களுக்கு உரி மைகளைக் கொடுங்கள். நீங் களும் உய்வீர்கள். உங்கள் இனமும் உயரும்.'

திரு. இராசமணி நன்றி கூறினார்.

## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவுவிழா

# 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்திற்கான

### உதைபந்தாட்ட நொக்-அவுட் போட்டி - ஜூன் 1969

### அரை இறுதி ஆட்டம்

| | திகதி | நேரம் | கழகம் | போட்டி நடைபெறும் மைதானம் |
|---|---|---|---|---|
| 1. | 10-6-69 | பி. ப. 3-45 | யுத்கவுன்சில் எதிர் சென். அன்ரனீஸ் | கோட்டை |
| 2. | ,, | பி. ப. 5-00 | சென். மேரிஸ் எதிர் வல்வை யுனைட்டட் | ,, |

ந. பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
யாழ். உதைபந்தாட்டச் சங்கம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
8-6-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org